உ

# யுத்த நிதிக்கு உதவுங்கள்!

## நம் நாட்டின் நலமே
## நம் வீட்டின் நலத்திற்கு அடிப்படை!


எதிரிப் படைகளை முறியடிக்க, நாம் ஒற்றுமையுடன் நிற்போம் கடைசி ரத்தம் உள்ளவரை ஒரு அங்குலம் கூட விடமாட்டோம், என்ற உறுதி கொள்வோம். போராடும் நம் சிப்பாய்களுக்கு உணவளிக்க, ஊக்கமளிக்க, எல்லாவித நலன்களையும் தியாகம் செய்வோம். தளவாடங்கள் வாங்க தங்கப்பத்திரத்தில் முதலீடு செய்து தாய் நாட்டைக்காக்க உறுதி கொள்வோமாக!

-: கவனிக்க :-

ஏராளமான அன்பர்கள் ஆலோசனைக் கோரிய தனிக் கடிதங்களுக்குப் பதில் எழுத அவகாசம் இல்லாத காரணத்தினுல் தயவு செய்து மன்னிக்க வேண்டுகிரேம். வசதியுள்ள அன்பர்கள் வேலூருக்கு வந்து மருத்துவர் அவர்களிடம் நேரில் ஆலோசனை பெறலாம்.

இங்ஙனம் :

மூலிகைமணி மானேஜர்.



அருள் மொழியரசர்

திருமுருக

# கிருபானந்தவாரியார் சுவா

(1965.)

உ

முருகா.

# வாழ்த்து.

## நேரிசைவெண்பா.

கல்வி நலமுடைய கண்ணப்ப நம்பியுயர்
பல்வண்ண மூலிகைப் பண்புதனை-நல்விதமாய்
மண்ணுலகம் உய்ய வழங்கினான். வாழியவே
விண்ணுலகம் போற்றும் வியந்து.

அன்பன்,

(ஒப்பம்) கிருபானந்தவாரி.

# மூலிகை மணி மருத்துவ மாத இதழ்.


ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்.

Dr. A. R. கண்ணப்பர். R.M.P. (Regd.)

ஆண்டு சந்தா : ரூ. 5—00 :: தனிப் பிரதி : 50 காசு

ஆறு மாத சந்தா கிடையாது.


## கார்த்திகை மணியில்


| | | |
|---|---|---|
| 1. | அருள் வாக்கு ! ... | 2 |
| 2. | சகலமும் கொடுப்பவன் ! (பாட்டு) ... | 3 |
| 3. | சமர்ப்பணம் ! ... | 4 |
| 4. | மதிப்புக் கொடுங்கள் ! (தலையங்கம்) ... | 5 |
| 5. | கார்ட்டூன் ! ... | 7 |
| 6. | ஆசிரியரும், எழுத்தாளர்கள் அறிமுகமும் ... | 9 |
| 7. | அருள் மொழியரசர் அடிக்கல் நாட்டு விழா ! ... | 12 |
| 8. | இதய ஒலி ! ... | 13 |
| 9. | அட்டைப்பட விளக்கம் ! ... | 16 |
| 10. | நோயும் மருந்தும் ! ... | 17 |
| 11. | வேலூர் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தின் கந்த சஷ்டி விழா!... | 28 |
| 12. | இலைக்கு நிகர் இலை ! ... | 29 |
| 13. | விஷஜந்துக்களும் மூலிகைகளும் ! ... | 33 |
| 14. | இலட்சியவாதி ! ... | 37 |
| 15. | வேலோடும் மயிலோடும் விளையாடிவா ! (பாட்டு) ... | 40 |
| 16. | மூலிகை தர்மம் ! ... | 41 |
| 17. | மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணதியங்கள் ... | 45 |
| 18. | ஆசிரியர் மிஸ்டர் குட் ! ... | 48 |
| 19. | படை வெல்லும் மூலிகைகள் (பாட்டு) ... | 55 |
| 20. | அவள் குணம் பெற்றாள் ! ... | 58 |
| 21. | ஜாதிகள் நான்கு உதித்த உண்மை வரலாறு ! ... | 63 |
| 22, | நவக்கோள்களின் முன்னறிக்கை ! ... | 66 |



போன் நெம்பர் 726. :: தபால் பெட்டி 26.

அலுவலகம் : 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ.)



மூலிகை மணியில் வெளியாகும் கட்டுரைகள் பதிப்பகத்திற்கு உரியது ஆசிரியர் உரிமையின்றி யாரும் பயன்படுத்தக் கூடாது. கதையில் வரும் பெயர்கள் கற்பனையே யாரையும் குறிப்பிடுவதல்ல.

# அருள்வாக்கு

நாம் நன்ருகப் பேசுகிரேம், எழுதுகிரேம். உலகம் புகழ்ந்து மாலே போடுகிறது. இந்தமாதிரி சமயங்களில் நமக்கு அகம்பாவம் சுலப மாக வந்து விடும். அப்போது சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அந்தப் புகழ்ச்சிக்கு எல்லாம் உண்மையான தகுதி நமக்கு உண்டா? எல்லாம் அம்பாளின் அனுக் கிரகம் அல்லவா? எந்த இடத்திலிருந்து நமக்கு அந்த சக்தி எல்லாம் வந்ததோ, அந்த இடத்துக்கே நம் புகழ் நமது ஸ்தோத்திரம் அனைத்தையும் அர்ப்பணிக்க வேண் டும். அப்படிச் செய்வதன் மூலம் நம் அகம்பாவம் மறைந்து அன்னையின் அருள் கிடைத்து நாம் க்ஷேமத்தை அடைவோம்.

- ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் சுவாமிகள்

உ

# "சகலமும் கொடுப்பவன்"

ராகம்.] விஜயவாணன் தாளம்.]
கரஹரப்ரியா : ஆதி.

பல்லவி

கந்தனெனும் பெயரை மறவாதே-நெஞ்சே
(தமிழ்க்)காவலன் ஞான காரணனுய் ஒளிர் (க)

அனுபல்லவி

மந்த மாருதம் தவழ் மலைதொறும் அன்பர்கள்
மனந்தொறும் குடிபுகும் மன்னனை வேலனை (க)

சரணங்கள்

நாடிய அடியவர் நலம் பல அடைந்தனர்
ஞானமும் பக்தியும் நாளுமே தருபவன்-எங்கு
ஓடிய போதிலும் உறவினில் அணைபவன்
ஓம் என உரைப்பவர் உளந்தனில் நிறைபவன் (க)

வேதியர் நாவினில் வேதமாய்த் திகழ்வான்
வீரரின் தோள்களில் விளங்குவான் வலிமையாய்
காதல் மிகு தமிழின் கலைகளாய் உறைபவன்
காண்பவர் அன்பினில் கருத்தினில் வாழ்பவன். (க)

பாரினில் படித்தென்ன ? பலருமே வியந்திட
பதவியிலிருந்தென்ன ? பசுமையாய் வாழ்ந்தென்ன ?
சீர்மிகும் முருகனைச் செந்தமிழ் கொண்டுமே
சேவிக்காத வீண்சென்மமு மிருந்தென்ன (க)

பக்தியுடன் பணிவோர் பவவினை அறுப்பவன்
பக்தியில்லார்க்கும் நல் பக்தியை அளிப்பவன்
சக்தி வேலேந்திடும் சங்கரி மைந்தனைச்
சந்ததம் பணிந்திடச் சகலமும் கொடுப்பவன். (க)

உ

முருகா.

ஓம் சத்குருவாகி நின்ற தமர குருவே சரணம்.

# சமர்ப்பணம்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணை கொண்டு அடியேனுடைய குருநாதர் அருள் மொழியரசு, திருமுருக **கிருபானந்தவாரியார் சுவாமிகள்** அவர்களால் கடந்த ஆண்டு கார்த்திகைத்திங்கள் முதலாவது இதழ் அவருடைய திருக்கரம் பட்டு வேலூர் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தில் ஸ்கந்தர் சஷ்டி நல் விழாவிலே வெளியீடு செய்யப்பட்டது.

அது முதல் 'மூலிகைமணி' சாதி சமய சமூக வேறுபாடுகள் இன்றி மருத்துவத்துறையிலும், நமது நாட்டின் பண்பு, கலாச்சாரங்களில் உள்ள புல்லுருவிகளைக் களைந்து எடுத்துக்காட்டி, நற்பணி செய்துவருவது வாசக அன்பர்கள் அனைவரும் அறிந்த விஷயமே. இத்துறையில் அடியேனுக்கு உற்ற துணையாக நின்ற வாசக அன்பர்களுக்கும், சந்தா அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், தினமணி சுடரில் அடியேனுடைய கட்டுரைகளைத் தவருமல் வாசித்து பயன் அடைந்த நம் நாட்டு மூலிகை அபிமானிகளுக்கும், நண்பர்களுக்கும், சந்தா நேயர்களாக்கும் முயற்சியில் ஈடுபட்டு பல அன்பர்களை சேர்த்துவைத்த பெரியோர்களுக்கும், நன்கொடை அளித்து அடியேனுடைய தொண்டில் பங்குகொண்ட அன்பர்கள் அனைவருக்கும் மற்றும் மூலிகைமணி விற்பனை ஏஜண்டுகளுக்கும் இதய பூர்வமான அன்பும் மகிழ்ச்சியும் நன்றியறிதலான வணக்கமும் உரியதாகுக.

இத்தொண்டு மேன் மேலும் தொடர்ந்து நடக்கவும், நமது நாடு மூலிகையால் நல் ஆரோக்கியம் பெறவும் மூலிகைமணியின் இரண்டாவது ஆண்டு மலரை சத்குருநாதரை நினைத்து, பவரோக வைத்திய நாதனும் தணிகைத் திருமுருகப் பெருமானுக்கு தலைவணங்கி சிரம் தாழ்த்தி மன மொழி, மெய்களால் சமர்ப்பணம் செய்து வாழ்க தமிழ் மருத்துவம் (சித்த மருத்துவம்) எனவேண்டுதல் செய்கின்றனன். சுபம்.

வணக்கம்
ஆசிரியர்.

உ

முருகா.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

# மூலிகை மணி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

மலர் 2] விசுவாவசு௵ கார்த்திகை-மாதம் (நவம்பர்-65) [இதழ் 1

## மதிப்புக் கொடுங்கள்.

நமது தென்னாட்டை ஆள்பவருக்கு மதிப்பு என்ற வார்த்தைக்கு இலக்கணம் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்று மூலிகை மணி மிகமிக வருந்துகிறது! மதிப்பு என்ற வார்த்தைக்கு ஒரு சிறிய உதாரணம்; இலக்க எண்களில் 1 முதல் 9 வரை ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது. ஆனால் இந்த பூஜ்யம் (0) இருக்கிறதே, இது ஒரு மதிப்பற்ற எண். இதை முன்னதாக வைத்து பிறகு மற்ற எண்களைப் போட்டால் மதிப்பு வருமா? 00001 இதை எப்படி நீங்கள் மதிப்பீர்கள்? ஐந்து ஸ்தானமுடைய எண்ணாயினும் இதை மதிப்பிடும்போது ஒன்று என்றுதான் மதிக்கலாம். இந்த எண்ணையே தலை கீழாக முதலில் 1 போட்டு பின் பூஜ்யம் போட்டால் இதன் மதிப்பு 10,000 ஆகிவிடுகிறது. அல்லவா ?

இது போலத்தான் நமது நாட்டின் ஆட்சியைப் பற்றி நினைக்க வேண்டியுள்ளது! ஒவ்வொரு நாட்டில் பிறந்த மனிதனும் முதலில் தனது நாட்டின் பழக்க வழக்கங்களுக்கும், கலாசாரத்திற்கும் இடமளித்துவிட்டுத் தான் அயல்நாட்டு நடையுடை பாவனைகளில் அக்கறை காட்டுவான்.


ஆங்கிலேயன் கூட, இப்படித்தான் நயவஞ்சகமாக நம் நாட்டைப் பிடித்து அவனுடைய மொழி, கலாசாரம், (கிராப், ஹாட், சூட், கோட், பூட்) ஆகியவைகளை மெல்ல மெல்லப் புகுத்திவிட்டான். இன்று நாம் அன்னிய (அ)நாகரிகத்தில் திளைத்து நாம் அதே வண்டித்தடத்தில் நம் வாழ்க்கையை ஓட்டுகிறோம். சுதந்திரம் கிடைத்தும் நமக்கு, அந்த மதிப்பு எண்ணை மாற்றியமைத்துக்கொள்ள முடியவில்லை. அதாவது, நம் நாட்டு கலாச்சார பழக்கவழக்கங்களைச் சட்டத்தில் முக்கியத்துவம் அளிக்காததே இதன் பொருளாகும்,

## சொன்னாலும் தெரியாது, தின்னாலும் புரியாது.

நமது மந்திரிகளுக்கு (நமது கலாச்சாரம் எது, அந்நிய கலாச்சாரம் எது என்று) பகுத்தறியும் சக்தி இருக்கிறதா என்பது சந்தேகம்தான்! காரணம் ஆங்கில ஆட்சி அகன்று 18 ஆண்டுகள் ஆகியும் ஆங்கில மருத்துவத் துறையை விட்டார்களில்லை. அது மட்டுமா? நமது நாட்டு மருத்துவத்தை ஆழக்குழிதோண்டி புதைத்துவிட்டார்கள். இதற்கு உதாரணம் சென்னை கீழ்ப்பாக்கம் இந்திய மருத்துவக் கல்லூரியை மூடி அதே இடத்தில் ஆங்கில எம்.பி.பி.எஸ். கல்லூரியைத் திறந்து விட்டார்கள். மற்ற மாகாணங்களிலோ ஆங்கிலேயன் சென்ற பிறகு ஒரு நாட்டு மருத்துவ கல்லூரிக்கு, நான்காக பெருகிவிட்டது. இதற்கு ஆந்திர மாகாணத்தை உதாரணம் காட்டலாம். தமிழ் நாட்டில் நாட்டு வைத்தியம் செய்த குற்றந்தான் என்ன? இதுபோல படிக்காத பரம்பரை நாட்டு வைத்தியர்களின் விருப்பத்திற்கு மாறாகவும், அவர்களுக்கு பாதகம் விளைவிக்கக் கூடியதுமான "மெட்ராஸ் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் பில்" (எல். ஏ. பில் 22—1965) என்ற மசோதாவை சட்டமன்றத்தில் ஏக போகமாக நிறைவேற்றி விட்டார்கள். இதை ஏற்படுத்திய செலக்ஷன் கமிட்டிக் குழுவில், உள்ளபடியே நாட்டு வைத்திய அபிமானி இருக்க வேண்டுமே! சட்ட மன்றத்தில் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஆளுங் கட்சிக்காரர்கள் எதைச் சொன்னாலும் மந்திரிகள் அதற்கு "ஆமாம்சாமி" போட்டு விடுகிறார்கள். (அது நல்லதோ கெட்டதோ!) ஆனால் எதிர்க் கட்சியாக இருப்பவர்கள், நியாயமானதையும், நமது பண்பாட்டுக்கலாச்சாரத்திற்கு ஏற்றதையும், மக்கள் தூண்டுதலால் கேள்விகளை கேட்டாலும் கூட எதிர்க்கட்சி சொல்லியா? நாம் கேட்க வேண்டும்?

# தமிழ்நாட்டின் (அ) நாகரிகம்

கார்டூன்



என்ற மனப்பான்மையில் அலட்சியம் செய்து விடுகிறார்கள். இது மிகமிக வருத்தபடவேண்டிய விஷயமாகும்.

அண்மையில் 17—10—65ல் சென்னை முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் மாபெரும் சித்த வைத்திய மகாநாடு நடந்தது. இம் மகா நாட்டிற்கு கட்சி, மத சார்பற்ற தமிழகத்தின் மாபெரும் தலைவர்களும் (மாநில சுகாதார அமைச்சர் உள்பட) கலந்து கொண்டார்கள். இம் மகாநாட்டில், சித்த வைத்திய வளர்ச்சிக்காக, பல அரிய ஆலோசனை களும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக, கோவை, திரு. ஜி. டி. நாயுடு அவர்கள், சென்னை மாகாண பிரதம மாஜிஸ்ட்ரேட், திரு. பலராமையா அவர்கள் மற்றும் பலர் உரை நிகழ்த்தினார்கள். ஆனால் இச் செய்திகளை, சென்னை மாநில பிரபல தினத்தாள்களில் ஒன்றை யும் காணோம். ஆய கலைகள் 64 என்று சொன்னார் ஔவைப்பாட்டி. அதில் மக்களுக்கு முதன்மையானதும், முக்கியமானதாக உள்ளது நாட்டு வைத்தியக்கலை. இந்த நாட்டு வைத்தியக் கலைக்கு ஏற்பட்டு வரும் நிலையைக் கவனித்தால், தான் பெற்ற பிள்ளையை நடுத்தெருவில் விட்டு விட்டு, எவளோ ஒரு ஓடு காலி பெற்ற பிள்ளையை எடுத்துக் கொஞ்சுவது போல இல்லையா? இந்நிலை மாற மதிப்பு எண்களை மாற்றி, நம் நாட்டு வைத்தியமான சித்த வைத்தியத்திற்கு முதலில் மதிப்பு கொடுங்கள் என்று மந்திரி சபைக்கு நம் நாட்டு மக்கள் சார்பில் மூலிகை மணி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறது.

---

வேலூர் டாக்டர் A. R. கண்ணப்பரின்

## "நம் நாட்டு மூலிகைகள்"

### முதல் தொகுதி

தினமணிச்சுடரில் தொடர்ந்து வந்த அரிய உயரிய மூலிகை ஆராய்ச்சி கட்டுரைகள் விரிவாகவும் விளக்கத்தோடும் கூடியது. பக்கங்கள்தோறும் படங்கள், பண்டைய மருத்துவ ஆய்வுகள், நோய்த்தீர்க்கும் பயன்கள், ஒவ்வொருபக்கமும் வைத்திய களஞ்சியம். நெடு நாளைய ஆராச்சியின் உழைப்பு புதையல்! அழகிய இனிய உரைநடை மொழியில் மருத்துவத்தை வாழ்வோடு இணைக்கும் பாலம் போன்ற நூல். ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய இயற்கைமருத்துவக்கண்ணாடி.

**திருத்திய புத்தக பதிப்பு தபால் சிலவுடன் 3-10 M. O. அனுப்பு வோருக்கு தபால் மூலம் கிடைக்கும்.**

P.B. 26 மூலிகை மணி காரியாலயம். போன்: 726

33/1, தென்னமரம் தெருவு வேலூர். (வ. ஆ.)



திருமுருக வாரியார் சுவாமிகளுடன், ஆசிரியர் அவர்கள்




திரு. P. V. M. K. செ[illegible]டியார்



திரு. மு. பெருமாள் முதலியார்

—: திரு. எழுத்தா அன்பர்கள் :—



ஸ்ரீ K. S. V. ரமணி



(இதயன்)
K. குப்புசாமி



புலவர்
வெங்கடேசன்



லக்ஷ்மி காந்தன்



DR. ஷண்முக நாதன்



வேலை வாணன்



விஜயவாணன்



நிலவழகன்



கருவை சித்தன்



M. பிலவேந்திரன்



வள்ளல்



புதுவைப்புலி



P. முத்தானந்தன்



கேசவன்

முருகா

# அருள் மொழியரசர் - - அடிக்கல் நாட்டு விழா.

தமிழகம் செய்தத் தவப்பயனுகத் தோன்றிய நம் ஒப்பற்ற 'உத்தம குரு சுவாமிகள் **அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார்** அவர்கள் 7—11—65ல் வேலூர் குயப்பேட்டை ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி சந்நிதி வீதியில் திருக்கலியாண மண்டபம் பு[illegible]க்கும் கால் கோள் விழா வைத் தம் பொற் கரத்தால் நடத்தி வைத்தார்கள் கா[illegible]5 மணிக்கு கோயில் தரும கர்த்தாக்கள் சார்பாக தருமகர்த்தா உயர் திரு.ஜி.மா[illegible]ங்கமுதலியார் அவர்கள் உடனிருந்து வரவேற்று உபசரித்தார்கள். சண்முகனடியார் சங்கத்தலைவர் திரு. ஜி. பாலசுந்தர முதலியார், உபத்தலைவர் திரு ஏ. எஸ். அருணசலம் பிள்ளை, திரு வி. கே. குப்புசாமி பிள்ளை, திரு. குண பூஷணம் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

வள்ளி மலையில் வேலூர் வள்ளி மணுளர் திருப்புகழ்ப் பாராயணச் சங்கத்தின் குருகுலம் கட்டடம் அமைக்கும் கால் கோள் விழாவை உயர் தவ அருள் மொழியரசர் தம் திருக்கரத்தால் அன்று காலை 9. 30 மணிக்கு நடத்தி வைத்தார்கள். திருப்பணியன்பரும் ஜமீன்தாருமான பெ. துரைசாமி முதலியார், தருமகர்த்தா N.R. முனிசாமி ரெட்டியார், மு. பெருமாள் முதலியார் மற்றும் பிரமுகர்கள் கலந்துக் கொண்டனர்.

சத்துவாச்சாரியில் அன்று காலை 9 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் இராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டு விழா அருள் மொழியரசு சுவாமிகள் அவர்கள் தம் மலர்க் கரத்தால் மகிழ்ச்சியோடு நடத்தினுர்கள். விழாவிற்கு வேலூர் உயர் திரு. A S. அருணசலம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினுர்கள் அன்பர் திரு. சுப்பிரமணியம் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். அன்று மாலையில் வேலூர் 'சண்முகனடியார் சங்கத்தில் கந்த சஷ்டி வெள்ளி விழாவில் கந்தரலங்கார விரிவுரை நிகழ்த்தினுர்.

இங்ஙனம்,

ஆசிரியர், மூலிகை மணி




1—11—65 அல்லாவரம்.

மூலிகை மணிக்கு ஆண்டு ஒன்று இனிது நிறைவேறிவிட்டது. ஆலம் விதைபோல் அது தன்னுடைய வருங்கால வளர்ச்சியை மிக உர மாக வாசகர்கள் அன்பாலும், அதன் பணியாலும் பெற்றுவிட்டது ஒராண்டு காலத்திலேயே தான் ஒரு ஆரோக்கியம் மிக்க குழந்தை என நிரூபிக்கும் வண்ணம் அது ஒரு அச்சகத்தை சொந்தமாகவே பெற்று விட்டது. இதையெல்லாம் நினைக்கையில் அதன் வளர்ச்சி, பணி நம்பிக்கைக்கு உறுதியளிப்பதாக இருக்கிறது.

வாழ்க மூலிகை மணி
கே. குப்புசாமி,
தொரப்பாடி. (வ:ஆ.)

---

1—11—65 நெல்லை.

டாக்டர் ஐயா வணக்கம். தங்கள் மூலிகை மணி முதல் பாகம் நம் நாட்டு மூலிகைகள் அகரம்புல், குப்பைமேனி இவைகளை பயன்படுத்தி நலமடைந்து வருகிறேம் இரண்டாம் பாகம் புத்தகம் வெளியிடும்போது எனக்கு ஒன்று அனுப்பி தாருங்கள்.

அறியாமையால் ஆங்கில மருந்துகளை அருந்தி உடல் நலிந்து போகும் இக்காலத்தில் தமிழகம் அறியுமாறு அறிவுரைகளை புகட்டி உண்மையை எடுத்துக் காட்டிய தங்களை பார்க்க ஆவலாக இருக்கிறது.

ஆறுபடை வீடாகிய திருச்செந்தூர் தமிழ் மணம் கமழும் திரு முருகப்பெருமானின் தரிசனத்தை நேரில் காண வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கிறேன் அப்பொழுதாவது தங்களை பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைக்குமா என்று தெய்வம்போல் நினைத்து தங்களின் பாத கமலங்களுக்கு சிரம் தாழ்த்தி இருகரம் குவித்து வணங்குகிறேன். (பி.ப.)

இத்தொண்டு மேன்மேலும் வளர்ந்து திருமுருகன் அருள் கிடைக்க பிரார்த்தனை செய்துக்கொள்ளுகிறேன்.

G. ஆறுமுகம்,
தேனீர்குளம்-தச்சநல்லூர்.

5—11—65. இராஜபாளையம்.

அன்புமிக்க வணக்கத்திற்குரிய டாக்டர் அவர்களுக்கு, P. S. நாராயணன் நாயர் எழுதும் கடிதம் தாங்கள் அன்புடன் அனுப்பிவைத்த மூலிகை ரக்ஷையைப் பெற்றுக்கொண்டேன். அதை தாங்கள் சொற்படி அணிந்து கொண்டபின் மன சந்தோஷமும், சில கெடுதல்களுக்கு சாந்தியும் உண்டாயிற்று. என் ஊரிலும் சிலரிடம் சொல்லி மூலிகை மணியின் பெருமையை எடுத்துரைத்து சந்தாதாரராகச் சேர முயற்சி செய்துவருகிறேன். வேலை செய்யும் இடத்திலும் கோள் சொல்லி என்னை கெடுக்கும் எண்ணம் உள்ளவர்கள் நிலை கொஞ்சம் குறைந்திருக்கிறது. எல்லாம் தங்கள் அன்பாலும், முருகன் கிருபையாலும் வந்தது என்று மகிழ்ச்சியடைகிறேன்,

பி. எஸ். நாராயண நாயர்,

4—11—65 கள்ளந்திரி.

தாங்கள் நம் நாட்டுக்கு செய்யும் தொண்டு ஆண்டவனுக்கு செய்யும் தொண்டு என்று எண்ணுகிறேன் காரணம் ஏழைகள் இடம்தான் கடவுள் இருக்கிறார் என்பது என் எண்ணம் ஆகையால் தாங்கள் எழுதும் மூலிகை மணி ஏழைக்குதான் மிகவும் பயன்படுகிறது.

தாங்கள் இந்நாட்டுக்கு செய்யும் நற்பணியை தொடர்ந்து செய்ய ஆண்டவன் தங்களுக்கு அருள் புரிவானாக

இங்ஙனம் தங்கள் பக்தர்களுள் ஒருவனாகிய,

வ. சு. ம. மந்தையன் அம்பலம்,
மதுரை ஜில்லா.

## எண் சீர் அடி விருத்தம்.

10—11—65 வேலூமா நகரம்.

கண்ணப்ப ரன்பைநீர் கண்டி ருப்பீர்
கண்ணப்ப மருத்துவரைக் கண்ட துண்டோ?
மண்ணகத்தே நெடுநாளாய் மறையா நோயை
மருந்திட்டுக் குணமாக்கும் மக்கள் சீலன்
எண்ணத்தால் மக்களெலாம் வாழ்தற் கென்றே
எண்ணற்ற மூலிகையால் மருந்து செய்து
புண்பட்ட நெஞ்சத்தில் பொலிவை ஏற்றிப்
புகழ்பெற்றூர்! வையகத்தே வாழ்வான் கண்டீர்!

இன்பமெலாம் இவ்வையம் பெறுக என்றே
இறவாத தமிழாலே உயிரை ஏற்றி
முன்னின்ற பச்சிலையால் மணிகள் கோத்து
மூலிகையின் மணிதந்தார் பொன்னேட் டாலே!
கல்வியுட னுயிர்வாழ்வார் எல்லாம் போற்ற
கவிபாடி பேரறத்தின் திறத்தைப் பாடிச்
செல்கின்ற காலமெலாம் செழிக்க என்றே
செந்தமிழால் வாழ்த்துகிறோம் வாழ்க நன்றே!

(எழுதியவர்: மா. செம்மல், தலைமை அஞ்சலகம், வேலூர்.)

-: சந்தா அன்பர்கள் கவனிக்க :-

சந்தாவைப்புதுப்பித்து கொள்ளும் அன்பர்கள் M-O செய்வதில் அனேகர் தமது பழைய சந்தா எண்ணை குறிப்பிடமலே M-O அனுப்புகிறார்கள் இதனால் கால தாமதம் ஆகும். தயவு செய்து சந்தா எண்ணை மறவாமல் மணியாடர் கூப்பனில் குறிப்பிட்டு விலாசமும் தெளிவாக எழுதவேண்டுகிறோம்.

# அட்டைப் பட விளக்கம்!

வேம்புக்கு அகராதிகளில் பராசக்தி ! என்றுதான் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் அன்னை குழந்தையை அரவணைத்து காப்பதுபோல தமிழ் நாட்டை இந்த அன்னை பராசக்திதான் காத்துவருகிருள். குழந்தைகளுக்கு வரும் நோய் முதல் பெரியோர்க்கு வரும் தீராத நோய்கள் வரை இந்த வேப்பமரம் குணப்படுத்திவிடுகிறது. தென்னுட்டுக்கே உரிய மரம். அம்மை என்ருல் (வைசூரி) எந்த நாட்டினருக்கும் பயம்தான் ! ஆனுல் தமிழ் நாட்டினர் அஞ்சமாட்டார்கள் ஏன் ? இந்த பராசக்தியின் அருளால் அம்மை ஓடிப்போகும் அதுமட்டுமா ? பேய் பிசாசுக்கள், முறை ஜுரம், வர்த சுரம், கபரோகங்கள் சர்க்கரை என்ற நீரிழிவு வியாதிகள் எல்லாம் ஓடிப்போம் வேம்பு ஒரு எளிய மூலிகை காயகல்ப வஸ்து. இதில் இனிப்பு வேம்பு, மலைவேம்பு, கரிவேம்பு என்பன உண்டு. '' வேம்புக்குப்பால் வார்த்தாலும் வேப்பலை தன் கசப்பு மாரு. தாம்பல நூல் கற்ருலும் துர்ச்சனர் தக்கோராகார் ஏன்பது பழமொழி. வேப்ப மரத்தை நாம் அடிக்கடி நினைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதிய நமது நாட்டின் முன்னேர்கள் புலவர்கள், அநேகப் பழமொழிகளை இயற்றியுள்ளனர்.

வேம்பு என்ற பராசக்தி மூலிகைமணியின் இரண்டாவது ஆண்டு மலரை சிறப்பு செய்ய அட்டைபடமாகிறது. இதுபோல நம் நாட்டு மூலிகைகள் இரண்டாவது பாகத்தின் முதல் கட்டுரையாக அமையும் என்பதை வாசக அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிரேம். அதுசமயம் வேம்புவைப்பற்றி தெளிவாக கண்டு வேண்டிய பலன் பெறுங்கள்.

## அறிவிப்பு.

''நம் நாட்டு மூலிகைகள்'' இரண்டாம் பாகம் வெளியீடு எதிர்பாராத சில சம்பவங்களால் அச்சுக் கோப்பு தாமதமாகி விட்டது எனவே முன் அறிக்கைபடி விழா தேதியை ஒத்திவைக்கப் பட்டுள்ளது விழா தேதி தினமணியில் பின்னர் வெளியிடப்படும்

மனேஜர்




[ இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் வினாக்களை தாராளமாக எழுதியனுப்பலாம் கூடுமான வரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகளை குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிடமாட்டாது. கேள்விகளை எழுதும் போது தெளிவாகவும் முழு விலாசமும் வயதும் குறிப்பிட வேண்டும். ]

கேள்வி. நாய் கடிக்கு நாட்டு மருத்துவ சிகிச்சை என்ன ? எப்படி செய்வது ?

**பதில் :** நாய் கடித்த நபர்களுக்கு தும்பை இலையை அரைத்து புன்னைக்காய் அளவு உள்ளுக்கு கொடுக்க வாந்தியாகும். கடியுண்ட இடத்தில் நாயுருவி இலையை அரைத்து ஈரத்துணியில் கட்டி அந்த இடத்தை தண்ணீரில் 1 மணி நேரம் வைத்து இருக்க வேண்டும். பிறகு எடுத்துவிட்டு புதுப்பானையில் பச்சரிசி பொங்கி உப்பில்லாத பால் சோறு மட்டும் கொடுக்க வேண்டும். 1 வாரம் செய்யவேண்டும். இரண்டாவது நாள் முதல் தும்பையை விட்டு அதற்கு பதிலாக உள்ளுக்கும் மேல் கட்டவும் நாயுருவி இலையே போதும். 11-ம் நாள் எண்ணெ ஸ்நானம் செய்ய நாய்கடி ரணம் சலிக்காமல் இருந்தால் விஷம் இறங்கி விட்டதாக கருதலாம்.

கே. மருத்துவ ஐயா, எங்கள் வீட்டில் தாவரங்களைப்பற்றி நீண்ட நாட்களாகவே ஓயாத தகராறு. வீட்டில் ஒரு தென்னைமரம் கூடாதாம் வீட்டில் முன்னால் எந்த தாவர இனங்கள் வளர்க்கலாம். பின்னால் எந்த வித தாவரங்களை வைத்து வளர்க்கலாம். வாத நாராயணன் வீட்டில் வளர்த்தால் வாதம் (சண்டை) விரோதம் வரும் என்று சொல்லுகிறார்கள். ''பாம்படியிருப்பினும் வீட்டில் வேம்படி கூடாது'' என்று ஆதாரமான பழமொழி கூறுகிறார்கள் எனவே எதை எதை வீட்டில் வளர்க்கலாம், கூடாது போன்றவற்றை விளக்க வேண்டுகிறேன்.

ப: வீட்டில் ஒற்றைத் தென்னை இருப்பது கூடாது என்பது உண்மையே. வீட்டின் முன்னே முருங்கை, வாத நாராயணன், அகத்தி ஆமணக்கு, தென்னை, பனை இன்னும் நீண்டு வளரும், எளிதில் ஒடிந்து விழும் தன்மையான தாவரங்களை வைக்கக்கூடாது என்று பெரியோர் கூறுவர். இதன் உட்பொருள் யாதெனில் முன்புறம் வீட்டி லுள்ளவர்கள் அடிக்கடி வெளியே போகவும் வரவும் நடமாட்டம் அதிக மாக இருக்கும் சமயா சந்தர்ப்பங்களில் காற்று, புயல், இடி, மின்னல் ஆகியவைகளால் மேல்படி மரங்களுக்கு சேதமுண்டாகும் சமயம், நம்மீது அவை சாய்ந்துவிடும் என்பதாக இருக்ககூடும். வேம்பு வீட்டின் முன் புறம் அவசியம் இருக்கவேண்டும். அதன் காற்று நமக்கு மிகுந்த ஆரோக்கியமும், வெக்கை நோய் தீர்க்கும் இயற்கை அன்னையுமாகும். நீங்கள் கூறிய 'வேம்படி' பழமொழியும் உண்மைதான். வேம்படி என்பதால் வீட்டின் முன்புறம் கூடாது என்று கொள்வது தவறு. வேம்புவின் உச்சிகால நிழல் வீட்டில் படக்கூடாது. அவ்வளவுதான் மாமரம், வேம்பு போன்றவை வீட்டின் முன்னேயும், முருங்கை வாத நாராயணன், கீரையினங்கள், கொடி வகைகள், வாழை தென்னை போன்றவை வீட்டின் பின்னே இருக்கலாம். வாத நாராயண மரம் இருந்தால் சண்டைவரும் என்பது பொய்க்கூற்று! ஆதாரமற்றதும். பயத்தையும் வெறுப்பையும் உண்டாக்ககூடிய வெற்றுப்பாடல்களால் நாட்டில் இன்று நன்மை தரும் பலவித மூலிகைகளை பயிரிடாமல் விட்டு விட்டார்கள். இதனால் நம் நாடு நலிவுற்றது. உதாரணமாக எருக்கன், ஊமத்தை, பிரம்மதண்டு, சப்பாத்தி, தும்பை ஆகியவைகள் வீட்டில் கூடாது என்பார்கள். "பாதாளமூலி படரும் இடத்தில் வேதாளம் குடி புகும்" என்பார்கள். பாதாள மூலி இருக்கும் பக்கத்தில் பேய் மிரட்டி

வளர்ந்தால்? எந்த வேதாளம் சேரும்? வீட்டில் நாம் தனிமையாக அமர்ந்து சாப்பிட்டால் கிழக்கு முகமாக உட்கார்ந்து சாப்பிடவேண்டும். இதுவும் நம் நாட்டு சாஸ்திர முறையே. ஆனால் ஒரு பெரிய விருந்து செய்யும் இடத்தில் இந்த நியதி அடிப்பட்டுபோய் விடுகிறது. அதுபோல எது கூடாது என்கிறீர்களோ அதுமட்டும் வீட்டில் வளரக்கூடாதுதான் ஆனால் பல மூலிகைகளோடு கூடாத மூலிகைகள் ஒன்று இரண்டு இருப்பின் குற்றமொன்றும் இல்லை. இதனால் கெடுதல் ஒன்றும் வந்து விடாது! ஆனால் வீட்டின் அருகே புளியமரம், புங்கமரம், ஒதியமரம், ஆச்சா மரம் போன்றவைகளை வைக்கக்கூடாது இதனால் விஷப்பூச்சிகள் வந்து சேரும்.

கே: எனது வயது 47, ஆகிறது சுமார் 30 வருடங்களாக விரை வலி இருந்து கொண்டிருக்கிறது எவ்வளவோ இங்கிலீஷ்மருந்து களைச் சாப்பிட்டாகி விட்டது. சவுகரிய மில்லை 7, 5, 3, 2, வருடங்கள் பொறுத்து பொறுத்து வந்துவிடுகிறது. முதலில் விரையில் வலி உண்டாகிறது 1 வாரத்திற்குள் பெரிதாகி நடுக்கமும் ஜுரமும் வந்துவிடுகிறது பிறகு 101 டிகிரி வரையில் இருந்து படிப்படியாக சுமார் 3, நாளைக்குள் சுரம் இறங்கி விடுகிறது சுமார் 10 நாளைக்குள் எல்லாம் சரியாகி விடுகிறது, இப்படி 30 வருஷமாக இருக்கிறது. விதை வலி குறைந்த பிறகு அந்த வாயு கால் பாதம், கணுக்களில், இறங்கி, நடக்கமுடியாத நிலை இதற்கு அன்பு கூர்ந்து நல்ல சிகிச்சை ஒன்று சொல்லுங்களேன்.

ப: மிக நாட்பட்ட வாத நோய்! அதை ஆங்கில மருந்துகள் சாப்பிட்டு உள்ளடக்கி வைத்துவிட்டீர் அது உமது குற்றமே ஒழிய வேறல்ல. எப்படி என்றால் முதல் தடவை ஆங்கில மருந்து சாப்பிட்ட போது 7 வருடம் வராமல் இருந்தது. இரண்டாவது தடவை 5 வருடம் அதன் பிறகு 3 வருடம் பின்பு 2 வருடம் இனியும் ஆங்கில மருந்தை தொடர்ந்து உபயோகித்தால் 1 வருடம் ½ இப்படியாக இடைக்காலம் குறுகி இறுதியில் தினந்தோறும் சாப்பிட்டால்கூட நிவர்த்தியாகாமல் அதே ஆங்கில மருந்து உயிரைச் சாப்பிட்டு உடலை விட்டு போகும்! பயப்படாதீர்கள்! ஆங்கில மருந்துகள் சாப்பிடுவதை விட்டுவிடுங்கள். அவுரி (அல்) நீலி வேரை பச்சையாக தினமும் எடுத்து அறைத்து காலையில் வெறும் வயிற்றில் புளியங்கொட்டை அளவு போட்டுக்கொண்டு தண்ணீர் குடித்து வரவும் 21 நாளைக்கு செய்து பின்பு நமது மூலிகை

மணி புரட்டாசி இதழ் 9, 17ம் பக்கம் வரை வாதத்திற்கு குறிப்பிட்டுள்ள விஷயத்தை கவனித்து சிகிச்சை செய்து கொள்ளுங்கள் சரியாகிவிடும்.

**கே :** மூலிகைமணி தாத்தா! எனக்கு வயது 10 நான் ஆறும் வகுப்பு படிக்கிறேன், சில மாதங்களுக்கு முன்பு அம்மை வார்த்தது, அதன் பின் முகம் வெளுத்திருக்கிறது உடம்பில் பலம் குன்றி யிருக்கிறது முன் போல் விளையாட முடிவதில்லை. சில சமயங்களில் அடி வயிற்றிலும் அள்ளை யிலும் வலு ஏற்படுகிறது, முக்கி, முக்கி, மலத்தைக் கழிக்க வேண்டி இருக்கிறது, என் பெற்றோருக்கு ஆஸ்பத்திரி மருந்துகளில் நம்பிக்கைஇல்லை. எங்களப்பாவுக்கு நாட்டு மருந்தில்தான் நம்பிக்கை ஆகையால் என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போக மனமில்லாமல் இருக்கிறார்கள் நாட்டு வைத்தியர்கள் எங்கள் பக்கத்தில் இல்லை. தாத்தா அவர்கள் தக்க சிகிச்சை முறை எழுத வேணுமாய் தங்கள் பொன்னான திருவடிகளுக்கு வணக்கம் செய்து கேட்டு கொள்ளுகிறேன் டி. புனிதவதி. 2/63 வள்ளலார் வீதி. அரகண்டநல்லூர்.

ப : அடியம்மா! பத்து வயது பேத்தி! உனது வயதுக்கு படிப்பு அதிகம்தான் ஆறுவது வகுப்பு சாமானியமா? பாவம்! எவ்வளவு புத்தகம் நோட்டுகளை சுமக்கிறாயோ பள்ளிக்கு. ஓய்வு சிறிது நாளைக்கு எடுத்துக்கொள். பத்து வயதில் நோயின் குறி, குணங்களை தெள்ளத் தெளிவாக எழுதியிருப்பது மகிழ்ச்சியே! நாட்டு மருத்துவத்தில் பற்றுடைய உமது குடும்பத்திற்கும் உனக்கும் முருகன் ஒரு குறையும் வைக்க மாட்டார். கவலைப்படாதே. அம்மை போட்ட உடம்பாகையால் வெக்கை (சூடு) மிகுந்துள்ளது அவ்வளவுதான். இதற்கு காலையில் பச்சை அருகம் புல்லை மட்டும் அம்மியில் அரைத்து சுண்டக்காய் அளவு காலை வெறும் வயிற்றில் 20 நாளைக்கு சாப்பிட்டு தண்ணீர் குடிக்க வேண்டும். பகலில் மோர், நெய் இரவு பால் சாப்பிடவும். மாமிச உணவு மிஷின் மிளகாய் தூள், பச்சை மிளகாய் தள்ளிவிட்டு குளிர்ச்சியான காய்கறி, கீரை வகையைச் சேர்க்கச் சொல்லவும். ஒரு 10 நாளைக்கு இரவு நேரத்தில் சீமை அத்திபழம் பாலுடன் சாப்பிட்டால் பலமும் சுறு சுறுப்பும் வரும். உன் பெற்றோரைச் செய்து கொடுக்கச் சொல்லி பூரண குணமடைவாயாக அன்பும் ஆசியும்.

**கே :** பகலில் சாப்பிட்ட பின்பு வயிற்றில் மேல் பாகம் வலித்தல் நெஞ்சை அடைப்பது போல இருப்பது. இரவில் படுத்தால் சுவர், மரம்

**மட்டை எந்த பொருளும் அசைவது ஆடுவது போல கண்களுக்கு தெரிவதும் தலை பாரமாகவும் ரத்தம் அதிகமாக ஓடுவது போலவும் இருத்தல் இதற்கு என்ன மருந்து? என் வயது 29. மணமானவன். ஆசிரியர் தொழில்**

ப: இது பித்த உஷ்ண சம்பந்தப்பட்ட நோய் குறிகளாகும் இதற்கு உங்கள் ஊரில் நாட்டு வைத்தியர்களிடம் **தாளிசாதி சூரணம்** எல்லோரிடம் இருக்கும். உனது கை நாடியை அவர்களிடம் காட்டிவிட்டு 20 நாளைக்கு மருந்தை வாங்கி பத்தியமுடன் சாப்பிடுங்கள் குணமாகிவிடும்.

**கே: நிலா வொளியில் படுத்துறங்குவது நல்லதா?**

ப: நிலா வொளியில் மட்டுமல்ல திறந்த வெளியில் படுத்துறங்குவது நல்லதல்ல. வானவெளியில் உலவும் விண்மீன்கள், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் ஆகியவைகளின் ரச்மி (Rays)துகள் ஒளிகளால் நமது உடல் தாதுக்களும் நரம்புகளும் பாதிக்கக்கூடும். "அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு" என்பது பழமொழி. எனவே இவை நாம் உறக்கத்தில் இருக்கும்போது ஒன்றையொன்று ஆக்ரஷ்ணம் செய்து உடல் பாதிக்கும் என்பது ஆன்றோர் கருத்து.

**கே: நகரங்களில் வசிப்போர் புகை தூசு போன்ற தீய காற்றையே சுவாசிக்க வேண்டியநிலை ஏற்படுகிறது. இதற்கு மாற்றாக எந்தெந்த உணவுப்பொருள்களை உணவில்சேர்த்துக் கொள்வது நல்லது?**

ப: இது மிகவும் நற்பயன் தரும் கேள்வி. இதையெல்லாம் நகரத்திலுள்ள மக்கள் எங்கே கவனிக்கிறார்கள்? கெட்ட நாற்றம் புகை தூசு ஆகியவைகளால் ஆயுள் குறைந்து போகும் என்பதை மிகப்பழங் காலத்திலேயே பாடலாக சித்தர்கள் எழுதிவைத்துள்ளனர். இதையெல்லாம் கவனிக்க நகர மக்களுக்கு எங்கே நேரமிருக்கிறது? சினிமா போவதற்கும் ஆயிரமாயிரம் மக்கள் சுவாசித்துவிட்ட காற்றையே சுவாசித்து தியேட்டர்க்குள் 3 மணி நேரம் தங்கி நுரையீரல் நோயாளி, க்ஷயரோகிகள் சுவாசித்த காற்றை தானும் வாங்கிக் கொண்டு வெளியே வருகிறான். வந்து பீடி, சிகிரெட் போன்றவைகளையும் உல்லாசமாக இழுத்துவிட்டு, போகும் வாகனங்கள் கிளப்பிவிடும் தும்பு தூசுகளையும் சுவாசித்து

கொண்டு வாழ்கிறார்கள். மனிதன் வாழ்வதற்கே நேரமில்லை என்றும் அங்கலாய்த்துக் கொள்ளுகிறார்கள். நோய் வருமுன் தடுக்கும் (சுகாதார முறை) தடுப்பு முறை மேல் நாட்டு நாகரீக கலப்பால் தலைகீழாகிப்போய் விட்டது? எடுத்ததெற்கெல்லாம் நோய் தடுப்பு ஊசியும் இஞ்சுலேஷனும் இஞ்சக்ஷனும் என்றாகிவிட்டது காலம். நமது நாடே ஊசியாலும் மாத்திரைகளாலும் அழிந்து வருகிறது என்றால் மிகையாகாது. காற்றில் கலந்து நின்ற தீய தும்பு, தூசுகளால் வரும் நோயை எந்த ஊசிமருந்தும் தடுக்காது. ஆனால் நாம் அன்றாடம் உண்ணும் உணவு மூலமாக ஒருவாறு நமது உடலை தடுக்கும் சக்தி உள்ளதாக மாற்றிக்கொள்ள வழியுண்டு. கெட்ட காற்றால் உடல் நலம் பாதிக்காமல் இருக்க நாள் தோறும் கீழ்கண்டவைகளை ஆகாரத்துடன் சேர்த்துவருவது மிகவும் நல்லது. முள்ளங்கி, அகத்திப்பூ, அகத்திக்கீரை, வாழைத்தண்டு, மிளகு, கொத்தமல்லி, திப்பிலி, சுக்கு, வசம்பு, பெருங்காயம், மாதுளைபழம் விதை, நெய்ச்சட்டிக்கீரை, மணலிகீரை, வெள்ளைப்பூண்டு, முக்கிரட்டை கீரை, வேளை கீரை ஆகிய்வற்றை, ஏதாவது ஒன்றை உணவுடன் சேர்த்துவர நுரையீரல் தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் சக்திகள் மேல்கண்டவைகளுக்கு உள்ளது என்பதை திடமாக நம்பலாம்.

**கே : எண்ணை தேய்த்து குளிக்கும் நாளன்று எந்தெந்த உணவுப் பொருள்களை(குறிப்பாக கீரை வகைகள்)விலக்குவது? எவைகளை சேர்த்துக் கொள்வது நல்லது ?**

ப : **விலக்க வேண்டிய பொருள்கள் :** முளை கீரை, தக்காளி; முள்ளங்கி, சுரைக்காய், பூசனிக்காய், பீர்க்கம்காய், அகத்தி, சிறுகீரை, பருப்பு கீரை, மணித்தக்காளி, பொன்னாங்கண்ணி, புளியாரை, வெண்டைக்காய், முட்டைகோஸ் ஆகியவைகளும், முக க்ஷவரமும், பெண் சேர்க்கையும் வெய்யில் அலைச்சலும் கூடாது

**சேர்க்க வேண்டியன.** அரைக்கீரை. சர்க்கரை வத்திகீரை, இஞ்சி புதினா, கருவேப்பலை, மிளகு ரசம், அவரைப் பிஞ்சு, பசு மோர், நெய், பால், முருங்கைப்பிஞ்சு, கிழங்குவகைகள், தூதுவளை, சுண்டை வத்தல் ஆகியன சேர்க்க.

**கே : மருத்துவரே ! சிலர் நற்சங்கன் என்றும் வேறு சிலர் நாறு சங்கன் என்றும் கூறுகிறார்களே இது ஒன்றா வெவ்வேறு மூலிகையா தய்வு செய்து விளக்கம் கூறுங்கள்.**

ப : சங்கன் மூலிகை இரண்டு வகைப்படும். ஒன்று நற்சங்கன் அல்லது முட்சங்கன் என்று பெயர். இந்த செடியில் கூரிய முட்கள் இருக்கும் இரண்டாவது நாறு சங்கன் என்பது. பீச்சங்கன், பீனறிச் சங்கன் என்றும் வழக்குப்பெயர். இரண்டு இலையும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவும், இலை கனமாகவும், ஒடித்தால் 'மடக்' என்ற சப்தத்துடன் ஒடியும் பீனறிச்சங்கன் இலை ஒருவித குமட்டலும் அருவறுப்பு நாற்ற மடிக்கும்.

**கே : ஐயா தாங்கள் "வைத்திய சித்தன்" என்றும், மூலிகைச் சக்கரவர்த்தி என்ற பல பட்டப் பெயர்களை திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் போன்றவர்கள் சூட்டியதை பல பத்திரிகை வாயிலாக அறிந்து பெருமகிழ்வு எய்தினோம். அடியேனுக்கு ஒருசிறு விளக்கம் தாருங்கள் ? அதாவது "ஈ எச்சக் கீரை" எள்பதாக கூறும் பெயர் வழக்குச் சொல்லாக எந்தவிதமான கீரையினத்தைச் சேர்ந்தது ? நமது நாட்டில் கிடைக்குமா?**

ப : ஈ எச்சக் கீரை தாராளமாகக் கிடைக்குமே ! உமக்கு தெரிந்த ஒன்றுதான் இது. நல்ல தமிழ் வார்த்தையின் வழக்கு பெயர்தான் **ஈ எச்சக்கீரை** என்பது இது நாளடைவில் மாறிவிட்டது. தற்போது இதற்கு புதினா கீரை, பொதினா கீரை என்றும் சொல்லுகிறோம். மார்கட்டு களில் இஞ்சி, கொத்தமல்லியுடன், விற்கும் புதினா கீரைதான் ஈ எச்சக் கீரை! புதினா என்பது இந்துஸ்தானி பெயர் விளங்குகிறதா ?

**கே : அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் தாங்கள் பல ஆண்டுகளாக தினமணி சுடரில் எழுதிவரும் பச்சிலைகளின் உப யோகத்தை ஓர் நோட்புத்தகத்தில் தவறாமல் எழுதி வருகிறோம். தாங்கள் அதை புத்தகமாக வெளியிட்ட முதல் பாகமும் ஒன்று வாங்கியுள்ளோம். மற்றும் நாட்டு மருந்தைப்பற்றி அனேகர் எழுதிய நூல்களும் எம்மிடம் உள்ளது. தங்கள் நம் நாட்டு மூலிகைகள் "முதல் பாகம் 17ம் பக்கத்தில் ஐங்கரனும் அருகம் புல்லும் என்ற பாராவில் வாக்குண்டாம் நல்ல மனமுண் டாம் என்ற செய்யுளில் ஐங்கரனை அருகு கொண்டு பூஜை செய்தால்" மேல்கண்டவை யாவும் உண்டாகுமாம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனல் ஒருவர் எழுதிய நூலில் "வாக்குண்டாம்" என்ற 'ஔவையார், செய்யுளில் கல்ப முறை அடங்கியுள்ளது என்றும் பார்த்தேன். அதாவது**

பூ — என்பது தாமரை புஷ்பம், மேனி — என்பது குப்பை மேனி, தும்பி — என்பது தும்பைச்செடியையும், கையான் — என்பது கரிசாலை என்றும் பாதம் என்பது செருப்படை மூலிகையும் ஆக பஞ்ச பூத மூலிகையை குறிப்பிட்டுள்ளது. இவைகளைச் சாப்பிட்டவர் சரீரத்தை வெகு நாள்வரை நரை, திரை, மூப்பு, பிணி என்பதை அணுகாமல் காக்கும் சக்தி கொண்டது என்பதை எழுதியுள்ளனர்.

சித்த வைத்திய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தாங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்த செய்முறைகளை தவறாமல் கடைப்பிடித்து பணம் சம்பாதிக்க எண்ணமில்லாமல் பொதுமக்கட்கு எளிய முறைகளில் வியாதிகளை சிலவில்லாமல் நிவர்த்தி செய்து கொள்ளும்படியும் எழுத்து தொண்டு செய்யும் தாங்கள் இதைக் குறிப்பிடவில்லை. ஆகையால் இதைப் பொது மக்கள் தயாரித்து பயன் படுத்தலாமா? என்பதை விளக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். (என். ராமையா, மிராசுதார். ஸ்ரீரங்கம்.)

ப: ஐயா' தங்கள் கேள்விக்கு தக்க உதாரணம் காட்டினால் தவிர விடை உங்களுக்கு திருப்திகரமாக இராது. நமது நாட்டின் சித்தர்களுக்கும் புலவர்களுக்கும் இருந்த, கவிதைத்திறமையும் நாவன்மையும் ஒருவராலும் அளவிடமுடியாது ஔவையாரின் நாலு கவிச்சுவையை நாவல் மரம்மீது நின்று முருகனே சுவைத்தான் எனில் நாம் எம்மாத்திரம்!

"ஒட்டக்கூத்தர்காலத்தில் சோழ அரசனை கவிஞர்கள், கவிபாடி ஓலையில் எழுதிக்கொண்டு வந்து அரசவையில் கூத்தர் முன்னிலையில் பரிசில் பெற்றுப்போவது வழக்கம். பரிகாரி ஒருவன் மனைவி தன் கணவனும் சோழ அரசனைப்பாடி பரிசு பெறவேண்டும் என நினைத்துதன் முட்டாள் கணவனை தூண்டி கூத்தரிடம் அனுப்பினாள். கூத்தரும் ஏதாவது ஒரு கவி எழுதிக் கொண்டு வரச் சொன்னார். அந்த முட்டாளுக்கு வரும்போதே கவிபாட தீவிர யோசனை வந்துவிட்டது! எதிரிலே ஒரு காக்கை, கூவிக் கொண்டு பறந்தது. உடனே எடுத்தான் ஓலைச்சுவடியை எழுத்தாணி கொண்டு, காவிரையே கூவிரையே... என்று எழுதினான் சிறிது தூரம் நடந்தான், அங்கே ஒரு பெருச்சாளி, கோயில் மதில் சுவற்றின் சந்தில் போய் நுழைந்துக் கொண்டது. சந்து அருகே சென்று சுவடியில் விட்ட இடத்திலிருந்து, உங்களப்பன் பெருச்சாளி கோவில் விற்பன்னன் என்று எழுதினான் — பின்னும் சற்று தூரம் நடந்தான். அவன் நண்பன் ஒருவன் எதிரே வந்தான் அவனிடம் தான் கவிதை எழுதுவதைச் சொல்லி நீயும் உதவி செய்யேன்! என வேண்ட, அவனும் எழுதேண்டா "கன்னா பின்னா தென்னா

மன்னு'' என்று சொன்னுன். உடனே அதையும் குறித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து, நடந்தவைகளை மனைவியிடம் சொல்லி பெருமைபட்டான். அவள் கவியை படித்து பார்த்து, நல்லாத்தானிருக்கு ஆனு, ராஜாவைப்பற்றி ஒரு வார்த்தைகூட இல்லையே, கடைசியாக அதிலே ''சோழங்கப் பெருமானே'' என்று சேர்த்துக்கொள்ளயோசனை சொல்லி சேர்த்து விட்டாள்.

அடுத்த நாள் அரசவையில் முதலாவதாக இந்த முட்டாளின் கவிதை! ''காவிரையே ! கூவிரையே! உங்களப் பன் பெருச்சாளி கோவில் விற்பன்னன்! கன்னு பின்னு தென்னு மன்னு, சோழங்கப் பெருமானே'' என்று படித்தான்! சபையில் ஒரே கேலிக் கரகோஷம்! புலவர்களை எல்லாம் சிரிக்க ஒட்டாமல் கையமர்த்தினுர், கூத்தர். முன்நாள் இந்த முட்டாளுக்கு வாக்கு கொடுத்தது நினைவுக்கு வந்தது. புலவர்களை நோக்கி இந்த கவியின் பொருளுணர்ந்து தானே சிரித்தீர்கள்! அவமானப்படுத்திய நீங்கள்தான் இந்த கவிதைக்குப் பொருளுரைக்க வேண்டும் கவி எழுதியவரைக் பொருளுரைக்குமாறு கேழ்க்கக்கூடாது. ஹூம்!... விடையளியுங் கள். என்ருர் சினந்து! சபையில் உள்ள புலவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு வாயடைத்து அச்சம் கொண்டனரே ஒழிய, ஒருவராலும் கவிதைக்கு உரை கூற முடியவில்லை. முடிவில் கூத்தரே உரை நிகழ்த்தினுர். எப்படி ? கா : கற்பகத்தருவிற்கு, இறையே — அதிகாரியே — தேவேந்திரனே ! கூவிரையே : (செல் வத்திற்கு அதிபதி) குபேரனே ! உங்களப்பன் — உம் தகப்பனுர் பரம்பரை, பெருச்சாளி கோவில் — பெரிய சக்ரவர்த்திகள் போல கோவில்களை கட்டி அரசாண்டவர்கள், விற்பனன் — யுத்தத்தில் பின் வாங்காதவர்கள். கன்னு—கொடையில் கர்ணன், பின்னு— அவனுக்கு பின் வந்தவர்கள், தென்னு — தென்னுட்டின் காவலர் கள், மன்னு — அரசர்களாகிய, சோழங்கப் பெருமானே சோழவமிச மன்னனே. என்று பொருள் விளக்கினுர். மன்னனும் மகிழ்ந்து அந்த முட்டாளுக்கும் பரிசு வழங்கியதாக வரலாறு.

இப்படி முட்டாள் கவிதைக்கே பொருள் கூறிய தமிழகம் ஔவை யார் போன்ற, அமர கவிகள் பாடிய பாடல்களுக்கு எந்த கோணத்தி லிருந்தும் பொருள் கூற, அவை பொருத்தமானதாக இருக்குமே ஒழிய நடைமுறையில், பழக்க சாதகத்தில், ''வாக்குண்டாம்'' என்ற செய்யுள் பாமர மக்கள் பக்தியுடன் துதி செய்வதாகவே பொதுவாக அமைந்துள்ளது என்பது அடியேனின் தாழ்மையான, கருத்து. அத்துடன் ஔவையார் ஒரு

மருத்துவராகவோ. அல்லது சித்தர் குழுவில் சேர்ந்தவராகவோ இல்லை. அப்படி நீங்கள் குறிப்பிட்டது போல பஞ்ச பூத கல்ப மூலிகைகள் என்று வைத்து கொண்ட போதிலும் தனித்தனியே குப்பை மேனியையும்,தும்பை யிலையையும் உட்கொள்ளும் போது அவை வாந்தியுண்டாக்கும், விஷத் தையும் 'போக்கும்' செய்கையைப் பெற்றிருக்கின்றன. அதுபோலவே தாமரையும், செருப்படையும் மேக ரோகங்களுக்கும் ரசவாத மூலிகையாக வும் நாட்டு வைத்தியர்கள் பயன்படுத்துவர். கரிசலாங்கண்ணி ஒன்றை மட்டும்தான் மக்கள் உணவின்போது வழக்கமாக உட்கொள்வர். ஆனால் மேற்கூறிய ஐந்து மூலிகையும் அர்ச்சனைக்கு பயன் படுத்தக்கூடியது என்பதை விநாயக புராணம் என்பதில் காணலாம். மேலும் இதனை கல்ப மூலிகையாகச் சேர்த்து சாப்பிடும்படி எந்த சித்தனும் கூறப்படவில்லை. எனவே இந்த பஞ்ச கல்ப முறை உள்ளுக்கு சாப்பிட பொது மக்களுக்கு அறிவிக்க முதலில் பரிசோதனை செய்த பின்புதான் கருத்து தெரிவிக்க முடியும்.

**கே :** டாக்டர் ஐயா அவர்களுக்கு வணக்கம் நான் மிகவும் ஏழை. கடலூரில் புகுமுக வகுப்பில் படிக்கிறேன் படிப்புச்சிலவுக்கு, தாங்கள் எனக்கு ரூபாய் ஐந்து அனுப்ப வேண்டும். என் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். (எஸ். ஆறுமுகம், பி, யூ. சி, மாணவன் கவர்மெண்ட் ஆட்ஸ் காலேஜ் கடலூர்.)

ப : அன்புள்ள மாணவர். உனது வேண்டுகோளின்படி ரூபாய் மணியாடர் வரும். அதை சினிமா, அக்கினி கைங்கர்யம் (புகைப்பது) போன்ற தீய வழியில் செலவிடாமல் படிப்புக்கு பயன் தரும் வழியில் செலவிடவும். முருகன் திருவருள் கிடைக்க எமது அன்பும் ஆசியும்.

**கே :** ஐயா! மூலிகை மணியை எமது கிராம மக்கள் படித்து பல மூலிகைகளைக் கொண்டு பயனடைந்து வருகிறார்கள். தென்னாடு பூராவும் உள்ள கிராம பஞ்சாயத்து நூல் நிலையங்களில் சிபார்சு செய்து வினியோகம் செய்ய தாங்கள் ஏன் முயற்சிக்க கூடாது ?

ப : தாங்கள் கூறுவது சரியே! ஆனால் நல்ல காரியங்கள் சுலபமாக மக்களிடையே பரவி விடாது! எவ்வளவோ தடைகள் உண்டு. நாங்கள் காலத்தை வீணாக்குவதைவிட இந்த காரியங்களை பொது மக்கள் செய்வதுதான் நல்லது. இதன் பலன்களை நீங்கள் கூறியதுபோல் மக்கள் தானே பயனடைகிறார்கள்.

உ
முருகா

# மூலிகை மணி நிதி நன்கொடை

# கடந்த ஆண்டு வரவு சிலவு கணக்கு

வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| குரோதி | தை மாதம் ரூபாய் | | 152 | 00 |
| ,, | மாசி | ,, | 49 | 00 |
| ,, | பங்குனி | ,, | 241 | 00 |
| விசுவாசு | சித்திரை | ,, | 17 | 00 |
| ,, | வைகாசி | ,, | 22 | 05 |
| ,, | ஆனி | ,, | 15 | 00 |
| ,, | ஆடி | ,, | 42 | 41 |
| ,, | ஆவணி | ,, | 16 | 00 |
| ,, | புரட்டாசி | ,, | 12 | 65 |
| ,, | ஐப்பசி | ,, | 122 | 34 |
| மூலிகை மணி ஆசிரியர் வரவு | | | 501 | 00 |
| | | | 1190 | 45 |

செலவு

| | | |
|---|---|---|
| எலிமெண்டரி பாடசாலை பள்ளி பிள்ளைகளுக்கு புத்தகம், பென்சில் ஸ்டேஸ்னரி வாங்கி கொடுத்த வகையில் பைத்து ரூ. | 158 | 45 |
| அண்ணுமலை பல்கலை கழக கல்லூரியில் படிக்கும் வேலூர் ஏழை மாணவர் எம்.பி. சத்தியவேல் முருகன் என்பவர்க்கு மாதம் 1 க்கு 50 ரூபாயாக ஆஸ்டல் செலவு ஒப்புக்கொண்ட வகையில் ஆஸ்டல் வார்டனுக்கு அனுப்பியது, ரூ. | 609 | 00 |
| ஆங்கில மருந்துகளில் சிக்கல் அடைந்த நோய்களை ஏழை நோயாளிகளுக்கு மட்டும் நேரிலும், தபால் மூலமாகவும் உதவி செய்த வகையில் ரூ. | 372 | 00 |
| வேலூர் குயப்பேட்டை புராதன கோயில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் கலியாண மண்டபம் கட்ட கொடுத்து உதவியது ரூ. | 51 | 00 |
| ஆக வரவு செலவு சரி 1190 45 | 1190 | 45 |

P. S. நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "நன்கொடைக்காக" என்பதனை மறவாமல் குறிப்பிட்டு எழுதவும்,

**மானேஜர்**

மூலிகை மணி காரியாலயம்,
33/1, தென்னமரம் தெரு, வேலூர் (வ.ஆ.)

உ
முருகா.

வேலூர் செய்திகள்.

# வேலூர் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தின் சஷ்டி விழா!

நமது நாட்டின் தனிப்பெரும் தவப்பெரியார் "திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தலைமையில் வழக்கம்போல சஷ்டி விழாவும், வெள்ளி விழாவும் சங்கத்தில் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டின் சிறப்பான அம்சம் யாதெனில் சஷ்டி முன்பாக 1 வாரம், பின்பாக 1 வாரம் ஆக விழா 1 மாதம் நீடித்தது. வெள்ளி விழாவின் இறுதியில், சண்முகனடியார் சங்கத்தில் சொற்பொழிவாற்றிய வித்வ சிரோன்மணிகளுக்கு எல்லாம் மேற்படி சங்க நிர்வாகத்தினர் சார்பில் ஸ்ரீவாரியார் சுவாமிகளால் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவ பட்டங்களும், வாழ்த்து மடல்களும் வாசித்தளிக்கப்பட்டது. வேலைமா நகர சரித்திரத்திலேயே அற்புத நிகழ்ச்சியாகும்! இந்த பெருமை வாய்ந்த நிகழ்ச்சி சண்முகனடியார் சங்கத்தின் தலைவர் திரு. ஜி. பாலசுந்தர முதலியார், உபதலைவர் எ. எஸ். அருணாசலம் பிள்ளை மற்றும் சங்கத்தின் நிர்வாகத்தினர் ஆகியோர்களின் பெரு முயற்சியால் நடந்ததை மனப்பூர்வமாக பாராட்டுகிறோம்!

வேலைமா நகருக்கே அணிகலனாக விளங்குவது, கோட்டையும், அதன் உள்ளே இருக்கும் ஜலகண்டேஸ்வரர் கோவிலுமாகும்! சரித்திர வரலாறும் பல அழகிய சிற்பக்கலையையும் ஒருங்கே கொண்டது இக்கோவில். யாது காரணத்திலோ 250 ஆண்டுகளுக்கு முன்பு இந்த கோவிலில் பூசை நின்று விட்டது. மீண்டும் நிகழவில்லை! ஒரு சமயம் இந்த கோவிலை கழற்றி கப்பலில் கொண்டுபோவதற்கு திட்டமிட்டு கப்பலைக் கொண்டு வந்தான் வெள்ளைக்காரன்! அந்த கப்பல் கடலில் பாதி வழியிலேயே முழுகி விட்டது!! எனவே அந்த முயற்சியை கைவிட்டு விட்டான். இக்கோவிலை புதுப்பித்து மீண்டும் பழையபடி பூசை நடத்தப்படவேண்டும் என்ற வேலைமா நகரமக்களின் பேரார்வம் நிறைவேறப் போகும் காலம் நெருங்கிவிட்டது! வேலூர் கோட்டையிலுள்ள ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தை புதுக்கி வழிபாடு செய்ய ஸ்ரீவாரியார் சுவாமிகளை தலைமையாகக் கொண்ட கமிட்டி கூட்டப்பட்டது. பொது மக்களிடமிருந்து 2 லட்ச ரூபாய் வசூல் செய்து அதற்கீடான தொகையை அரசாங்கத்திடம் பெற்று மேற்படி ஆலயத் திருப்பணி செய்வதென தீர்மானம் ஏகமனதாக முடிவேறியது. அறநிலைய பாதுகாப்பு இலாகா, கனம் முதல் மந்திரி அவர்களும், இதற்கு வேண்டிய உதவிகளை செய்வதாக சட்ட மன்றத்திலேயே உறுதி கூறியதாக M.L.A. ஜீவரத்தின முதலியார் அவர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்! முதல் கூட்டத்திலேயே ஏராளமான மக்கள் இத்திருப்பணிக்கு நிதி உதவினர். இத்திருப்பணிக்கு அன்பர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தாராளமாக பண உதவியை அளிக்கலாம்!

திரு. A. S. அருணாசலம் பிள்ளை,
ஜலகண்டேஸ்வரர் ஆலய கமிட்டி பொறுப்பாளர்,
லாங்கு பஜார், வேலூர். (வ. ஆ.)

உ

முருகா.

# இலைக்கு நிகர் இலை

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

நாம் வாழும் நாடு பாரத நாடு. இந்நாடு பொன்னுட்டினும், வேறு எந்த நாட்டிலும் மேலான நன்னுடு.

இந்த நாட்டிலே அநேக சித்தர்கள் வாழ்ந்தார்கள். இன்னும் வாழ்கின்ருர்கள், என்றும் வாழ்வார்கள். சித்தர்கள் பலப்பல அற்புதங்களைச் செய்தார்கள். அவர்கள் செய்த அற்புதங்கட்குத் துணையாக இருந்தது பச்சிலைகள்.

''இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்'' என்பது பழமொழி. இரும்பைப் பல புடம் இட்டும் பஸ்பஞ் செய்வார்கள்.

எனக்குத் தெரிந்த பெரியவர் ஒரு பச்சிலையை பிழிந்து அதில் இரும்பைப் போட்டார் அந்த இரும்பு கரைந்து விட்டது. இரும்பைக் கரையவைக்கக் கூடிய ஆற்றல் படைத்த பச்சிலையும் இருக்கின்றது. இது போன்ற அரிய மூலிகைகளை நம் நாட்டு சித்தர்கள் பலரும் சொல்லாமல் மூடி மறைத்து வைத்தார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஒன்று, இரும்பைக் கரையவைக்கும் பச்சிலையை வெளிப்படுத்திஞல் கள்வன் அப்பச்சிலையைக் கொண்டுபோய் இரவில் கதவின் தாளில் பிழிந்தால் இரும்பு கரைந்துவிடும். உள்ளே புகுந்து கொள்ளையடிப்பான். கள்ளருக்கு இது பயன்பட்டால் உலகிற்கு கேடு விளையும். அதனுல் சிலவற்றை அவர்கள் வெளியிட அஞ்சினுர்கள். வெளியிடாமலேயே ஏகினுர்கள்.

கடவுள் சமானம் இல்லாதவர். "தனக்கு உவமையில்லாதான்" என்கின்றார் திருவள்ளுவர். "நிகர்பகர் அரியதை" என்கின்றார் அருணகிரி நாதர்.

சமானம் இல்லாத கடவுளைப் போய், தனக்குச் சமானம் இலை யென்று பெருமையுடைய இலையும் உண்டு. இலைகளைக் கொண்டு நமது முன்னோர்கள் செய்த அரிய செயல்கள் பலப்பல.

சூரபன்மனுடைய வில்லாசிரியன் இடும்பன். இவன் சூரபன்மன் மயிலும் சேவலும் ஆனபின் கயிலை மலையின் சாரலில் சிவத்தை நோக்கித் தவத்தைச் செய்து கொண்டிருந்தான். அகத்தியர் சிவபெருமானிடம் கயிலையின் கண் உள்ள சத்திமலை, சிவமலை, என்ற குன்றுகளைப் பெற்றார். இடும்பனை எடுத்துக் கொண்டு வந்து தென்னாட்டில் சேர்க்குமாறு பணித் தருளினார். தனது யோகதண்டத்தையும் தந்தருளினார். இடும்பன் தன் மனைவி இடும்பியுடன் சக்திமலை, சிவமலை என்ற இரு குன்றுகளைக் காவடியாகச் செய்து சுமந்து கொண்டு குன்றாத வலியுடன் தென்னாட்டை நோக்கி வழி நடந்தான். புஷ்பகிரி வழியாகச் சென்றான்.

அந்த புஷ்பகிரி இன்று சென்னிமலை யென்ற நாமத்துடன் வழங்கு கின்றது. சென்னிமலையென்ற அரிய தலம் ஈரோடுக்கு அப்பால் விளங்கு கின்றது. சென்னி மலையில் பிண்ணாக்கு சித்தர் பலகாலந் தவஞ் செய் தார் என்று பெரியோர் கூறுவர். நல்ல எழில் மிகுந்த பொழில் சூழ்ந்த அரியமலை சென்னிமலை. இப்போது காரே, மலைமீது செல்லும் தடம் அமைத்திருக்கிறார்கள்.

---

## புகை யிருமலுக்கு

சுக்கு, திப்பிலி, மிளகு, மூன்றும் சமஎடையாக எடுத்து மை போன்று அறைத்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயம் செய்து அந்த எடைக்கு வெள்ளை சர்க்கரையில் இரண்டாந்தர மாகிய பூரு சர்க்கரை சேர்த்து புட்டியில் வைத்துக் கொண்டு. வேண்டிய போது திருகடிபிரமாணம் எடுத்து பசும் நெய்யில் குழைத்து சாப்பிட மூன்று வேளையில் தீரும்.

(திருகடி — மூன்று சிட்டிகை அளவு)

சென்னிமலையில் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடித் துதி செய்திருக்கின்றார். அருணகிரிநாதருக்கு இம்மலையில் படிக்காசு வழங்கினார் என்பர்.

ஒரு பச்சிலையால் முதுமை நீங்கி வாலிபம் உண்டாகும் என்பதை கடந்த ஆண்டு மூலிகை மணி முதல் மலரில் எழுதினேன், கொங்கு மண்டல சதகத்தின் ஒரு பகுதி அது.

சென்னி மலையில் வசித்த சித்தர் ஒரு மூலிகையில் சுண்ணும்பை வெண்ணையாக்கி அதை தானும் சாப்பிட்டு சோதிக்க வந்த குடும்பஸ்தனையும் உண்ணச் செய்த அதிசயம் அடுத்த மூலிகை மணியில் வாசித்தீர்கள் அல்லவா ?

அடுத்து ஒரு• ஏழைக் குஷ்டரோகியின் துன்பத்தை கண்டு இரங்கிய சித்தர், ஒரு செம்பு அரையணு காசை ஒரு மூலிகையால் சாம்பலாக்கி அதை அந்த குஷ்டரோகிக்கு கொடுத்து தொழு நோய் நீங்கிய வரலாற்றையும் கண்டு இருப்பீர்களே!

இடும்பனால் கொண்டுவரப்பட்ட சிவமலை சென்னிமலைக்கு அருகே உள்ளது. அது இப்பொழுது பழனி மலையாகி விட்டது! போகர் என்ற சித்தரால் பழனியாண்டவர் சிலை நிர்மாணிக்கப்பட்டது.

இந்த சிலை பலவித பாஷாணங்களைச் சேர்த்து பச்சிலை மூலிகைகளால் களங்கமாக்கி செய்யப்பட்டது. இந்தச்சிலைக்கு அபிஷேகமாகி வரும் பழம், பால், பஞ்சாமிருதம், திருநீறு ஆகியன, தீராநோயை எல்லாம் போக்கும் சக்தியுடையது என்பது தமிழகம் அறிந்த உண்மை.

போகத்தில் இச்சை கொண்ட காரணத்தால் போகர் என்ற பெயர் பெற்ற சித்தர் பல நாடுகளுக்கு சென்று பல மொழி பேசும் மக்களுக்கு நுண் கலைகளை கற்று கொடுத்து திரும்பினார். பிறகு நம் நாட்டு மக்களுக்கு ஏதும் செய்யவில்லையே என ஏங்கியவர் நமது மக்கள் ஆரோக்கியமாக வாவது இருக்கட்டுமே என்று பழனியாண்டி சிலையை (பாஷாணத்தை மூலிகைகளால் கட்டி சிலைய்ய வடித்தெடுத்து) நமது நாட்டிற்கு அளித்தார்! இந்த சம்பவம் நிகழ்ந்தது திரேதாயுகத்தில்.

நாம் கலியுகத்தில் வாழ்கிறோம்! இரும்பை உருக்கும் மூலிகைகள் ! சுண்ணும்பை வெண்ணையாக்கும் மூலிகைகள்! செம்பை பொன்னுக்கும் கிழவனைக் குமரனுக்கும் மூலிகைகள், மதியை கூர்மையாக்கும் மூலிகைகள் இன்னும் இறைவனை நம் பால் இழுத்து நாம் கடைத்தேற வைக்கும், அர்ச்சனை மூலிகைகள் பலப்பல. வள்ளல் இராமலிங்க சுவாமிகள்.

பிணி நீக்கும் மூலிகைகளை ஆருவது திருமுறையில் அனேகம் சொல்லி யிருக்கிறார். படிப்போர் அனைவரும் பயன் பெற்று நல் ஆரோக்கியம் பெறுவார் என்பதில் ஐயமுண்டோ?

சிலர் தங்கம் செய்வோம் என்று பங்கம் ஆவார்! எனவே ஆசையுடன் மூலிகைகளை தேடி அலையாமல் அன்புடன் பச்சிலைகளை பாருங்கள். பச்சிலை மூலிகைகள் செய்யும் அற்புதத்திற்கு அளவு ஏது? ஆதலின் இலைக்கு நிகர் இலை என்று பெரியோர் கூறுவர்.

(முற்றும்.)

---

# "மூலிகை மணி வளர்ச்சி நிதி"

கார்த்திகை மாதம் 2வது ஆண்டு தொடக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| உயர்திரு. | பி. சாரங்கபாணி நாயுடு. வட்டாரம் ... | ரூ. | 10 | 00 |
| ,, | எவரெஸ்ட் ஸ்டூடியோ, சேலம் 1 ... | | 5 | 00 |
| ,, | எஸ். துரைசாமி, சென்னை-1 ... | | 5 | 00 |
| ,, | சி. செல்லப்பன், கொள்ளேகால் ... | | 3 | 10 |
| ,, | வசந்தகுமாரி, பாப்பி ரெட்டிபட்டி ... | | 3 | 00 |
| ,, | எம். சாம்பாகியராஜ். மார்த்தாண்டம் ... | | 3 | 00 |
| ,, | வி. கமலக்கண்ணன், சென்னை ... | | 2 | 85 |
| ,, | டி. ரங்கன், ஸ்ரீரங்கம் ... | | 2 | 15 |
| ,, | டி. எஸ். கலியாணசுந்தரம், சென்னை ... | | 2 | 00 |
| ,, | கே. வி. தண்டபாணி, மேட்டூர் ... | | 2 | 00 |
| ,, | சி. வி. சீனிவாச ராகவன் வில்லக்கூர் ... | | 2 | 00 |
| ,, | எம். சி. கோபாலன், பெங்களூர்-17 ... | | 2 | 00 |
| ,, | ஆர். இராமசாமி, கிருஷ்ணபுரம் ... | | 1 | 90 |
| ,, | எஸ். சண்முகம், திருநெல்வேலி ... | | 1 | 84 |
| ,, | டி. எம். திருமலை சாமிதாஸ், தாராபுரம் ... | | 1 | 08 |
| ,, | ஆர். நஞ்சப்பன், மதுக்கரை ... | | 1 | 00 |
| | ஆக மொத்தம் வரவு ... | ரூ. | 47 | 82 |




(சென்ற மாதத்தொடர்ச்சி,)

# பேதி மண்டலி

பேதி மண்டலிஎன்ற விஷ கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு. கடுமையான காய்ச்சல், குளிர் இவைகள் உண்டாகி மலம் இளகி நீராக பேதியாகும். இந்த மண்டலிவிடம் நீங்க பெருங்காயம், வசம்பு, வெள்ளை பூண்டு, கந்தகம், நீலி வேர், பெருமரப்பட்டை இவைகளை சரி எடை எடுத்து பசுவின் பாலால் அறைத்து குடித்துவர பேதி மண்டலி கடிவிடம் நீங்கும்.

கடித்திட்டால் பேதி என்றல் மண்டலிக்குக்
காய்ச்சல் குளிர் பேதியடா கடுமையாயே.

கடிதான பேதி என்ற மண்டலிக்குக்
காயமும் வசம் புள்ளி யோடு கந்தி

கொடிதான நீலி பெரு மரத்தின் பட்டை
குடித்திடுவாய் யாவின் பால் குடியோடி போம்.

## எரி மண்டனி.

இது கடித்தால் முகம் எல்லாம் நெருப்பாக எரியும். உடம்பும் நெருப்பில் வாட்டியது போல் அனலாகும். பெருமூச்சி எரிதல், தலை சுற்றி கீழேயடித்தல் ஓயாமல் வேர்வை விடுதல் போன்றவை உபகுண குறிகளாகும்.

முடியாத வெறி மண்டலி தான் கடித்தால்
மூச்சு வரும் நெருப்பாக முக மெரியும்

அடிக்கடி தான் தலை சுற்றிக் கீழே தள்ளும்
அங்கமெலா நெடுப்பரிஞ் சலமாய் பாயும்.

ஓயாத வெறி மண்டலி விடமே போக
ஒரு பலந்தான் விடதாறி வேராவின் பால்.

ஆகமாய் படியொன்றைத்தே யுண்பாய்
அதைத் தானே யெங்கமெலாம் துவாலை பூசே.

எரி மண்டலி தீண்டியவர்களுக்கு விடதாறி என்றமூலிகையின் வேரைஒரு பலம் எடுத்து பசும் பாலை விட்டு அறைத்து ஒரு படி பசும் பாலில் கலக்கி சிறிது சிறிதாக குடித்து வரவேண்டும். அதையே உடம்பு முழுவதும் துவலை செய்ய விஷம் இறங்கும்.

## வெறி மண்டலி.

இந்த மண்டலி கடி குணம் யாதெனில் நிலத்தில் உள்ள பொருள்கள் கண்ணுக்கு காணுதபடி. பிரம்மை உண்டாகும். வெறி ஏற்பட்டவன் வாய் திறந்து கடித்தல், எழுந்து வெளியே ஓடிபோய் விடுதல் அசாத்திய கோபம் உண்டாகுதல். போன்ற குறி குணங்கள் ஏற்படும். இந்த விஷம் குணமாக கறுப்பு புள்ளி உடைய வண்ணுத்தி பூச்சியை பிடித்து ஒரு பலம் எடுத்து மெழுகுபோல் அறைத்து $\frac{1}{4}$ படி நல்லெண்ணெயில் கலந்து மெழுகுபதமாக காய்ச்சி உடல் முழுமைக்கும் துவாலை இட்டு முறிக்கி பிடிக்க வேண்டும். இப்படி ஐந்து நாள் செய்தால் வெறிமண்டலி கடிவிஷம் நீங்கும்.

## பல்லி

பல்லி என்பது வீட்டில் கரப்பான் பூச்சி, தேள், சிலந்தி, ஈ ஆகிய வற்றை பிடித்து தின்று நமக்கு நன்மை செய்யும் வீட்டு பல்லியைத்தான் இப்பொழுது குறிப்பிடுகிறது. பல்லி கடியால் மரணம் ஏற்படுவது கடினம். இது கடிப்பதும் அரிது. எதிர்பாராத சில சமயங்களில் கடிக்க நேர்ந்தால் கடித்த இடத்தில் வலி, எரிச்சல். வியர்வை, வீக்கம், மார்பில் ஒருவித

(அடுத்த பக்கம் கீழே பார்க்க)

உ

முருகா

# இலட்சியவாதி

மு. பெருமாள்.

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

வேறு மாணவன் வந்து தனக்குத் தலைவலி சுரம் வந்துள்ளது என்றான். உடனே இலட்சியவாதி சுக்கு, மிளகு, சீரகம் மூன்றையும் சமனிடைப் பொடி செய்து கஷாய மிட்டுக் கொடுக்கச் செய்தார்.

இக்கஷாயம் எனக்குப் பிடிக்காது. ஆஸ்பத்திரிக்கு சென்று டாக்டரிடம் மருந்து சாப்பிடுகிறேன் அனுமதி கொடுங்கள்.

தம்பி உனக்கு நோய் தீரவேண்டுமா? அல்லது ஆஸ்பத்திரி டாக்டர் வேண்டுமா? அவர் ஒருவேளை மருந்தில் குணமாவதை, ஒன்பது நாட்களுக்கு ஓடி அலையவைத்துப் பணம் வாங்கி ஊசியும் போட்டு, பில்லும் பெருந்துகைக்கு அனுப்புவார். ஒரு அணா செலவு மூலிகையில் நோய் ஒரே நாளில் ஓடி மறையும் எது வேண்டும்?

கஷாயம் என்றாலே குமட்டல் வருகிறது எனக்கு, இதை தயார் செய்வதற்குள் டாக்டரிடம் சென்றால் மருந்து உடனே ஆயத்தமாக வுள்ளதை தருவார்.

மணிக்கணக்காக வேலைகெட்டு டாக்டரிடம் காத்திருக்கலாம், ஆயின் ஐந்து நிமிடத்தில் தயாராகும் கஷாயத்தைச் சாப்பிட உன்னால் முடியவில்லையா? சிந்தித்துப் பார்க்காமல் செய்கின்ற செயலிது. மக்களிடையே வளர்ந்து வரும்மந்த புத்தியின் மனப்பான்மையாகும். மேல் நாட்டுத் தொடர்பால் நம் நாட்டுக்கு மூண்ட தீமைகளில் இதுவும் ஒன்றாகும். ஆங்கில ஆட்சியில் விளைந்த ஆஸ்பத்திரி மோகம் நம்மையும், நாட்டையும் விட்டு அறவே அகலவேண்டும், காரணம் விளக்குகிறேன் தம்பிகளே! கருத்தில் நிறுத்தி கடமையில் காணுங்கள்.

எல்லாம் வல்ல ஆண்டவன் முருகப்பெருமான் உலகிலுள்ள உயிரினங்கள் உய்வதற்காக நிலம், நீர், காற்று, நெருப்பு, வெளி என்னும் ஐம்பெரும் சாதனங்களை உதவியுள்ளார். பணத்துக்காகவன்று, எவரும் எளிதில் இலவசமாக எய்தி இன்புறட்டும் என்ற இன்கருணையால். ஆயின் இதனைப் பயன்படுத்த மனிதன்தான் சூதாகப் பணம் பறிக்கும் முறையை வகுத்துவிட்டான். இதனைச் சேமித்து மக்களுக்குப் பயன்படுத்த உழைப்பவர்க்கு ஊதியமாக ஒரு அளவு அமைப்பது உரிய நியதியாகும். எனின் ஒன்றுக்கு நூற்றாகவும், பெருக்கியும்,

நீட்டியும் வளர்த்தும் முறை ஏற்றதன்று. ஆஸ்பத்திரி முறையே இந்த ஆடம்பரப்பணச் செலவுதான் எங்கும் இலவசமாக வளர்ந்துகிடக்கும் மூலிகைகளிலிருந்து எல்லா மருந்துகளும் தயாராகின்றன. மேல் நாட்டு மருந்து கம்பெனிகள் இம் மூலிகைகளிலிருந்து ரசாயன முறையில் மருந்து தயாரித்து ஒன்றுக்கு நூருக விலை நிர்ணயம் செய்து

## பல் நோயிற்கு கொப்பளிக்க

வேப்பம்பட்டை, வேலம் பட்டை, ஆவாரம்பட்டை, கடுக்காய், காசிக்கட்டி, கொட்டைபாக்கு இவைகள் வகைக்கு கால் பலம் எடுத்து இடித்து தூள் செய்து ஒன்றை படி தண்ணீரில் கலக்கி கால் படி கஷாயமாக குறுக்கி இளம் சூட்டுடன் காலையில் கொப்பளித்துவர தந்த ரோகங்கள் யாவும் தீரும்.

கவர்ச்சிகரமாக கருவிகள் தயாரித்து அதில் அனுப்பி வைக்கின்றனர். பார்த்தவுடன் பத்தணு சாமானை பத்து ரூபாய் என்ருலும் பரமதிருப்தியோடு வாங்கி விடுகின்றனர். தோட்டத்திலும், வேலியிலும், வயலிலும், காடுகளிலும் இலவசமாக வளர்ந்து கிடக்கும் மகத்தான மூலிகைகளின் மாபெரும் ஆற்றலை மக்கள் அறிவதில்லை.

இன்றைக்கு சில நூற்ருண்டுகட்கு முன்னர் வாழ்ந்த மக்களெல்லாம் அறுவை சிகிச்சை (ஆபரேஷன்) யில்லாமல் எளியமுறையில் கிடைக்கும் இலவசமான மூலிகைகளைக் கொண்டு நோயை தீர்த்துக் கொள்ளவில்லையா? காலில் எலும்பு முறிந்தால் வெட்டி காலைத்துண்டிக்கின்றனர் ஆஸ்பத்திரி முறையில், ஆயின் இன்னும் புத்தூரில் மூலிகையைக்கட்டி முறிந்த எலும்பை இணையவைத்து துண்டிக்காமல் காத்துவரும் அற்புத மூலிகையின் ஆற்றலை அனைவரும் அறிந்தது தானே, பண்டைக்காலப்பெரியோர்கள் கண்ட மூலிகை மருத்துவ முறைகளை நம் நாட்டில் இன்னும் பாதுகாத்து வருபவர்கள் சித்த வைத்தியர்கள்! சித்தர்கள் கண்ட அரிய பெரிய தவமுறை அநுப விளக்கம்தான் சித்த வைத்திய முறையாகும். உலகில் எளிதில் கிடைக்கும் ஒவ்வொரு மூலிகைகளின் ஒப்பற்ற ஆற்றலை உலகிற்கு உணர்த்தியவர்கள் உயர்தவத்தினர்களான சித்தர்களே! சித்தர்களின் மருத்துவச் சித்தாந்தம்தான் சகல உயிர்கட்கும் சிறந்தவழிகாட்டியாகும். சித்தர்களின் தலைமை மருத்துவர்தான் சண்முகப்பெருமான். இங்ஙனம் எல்லாம் இறைவன் மூலிகைகளின் நுட்பமான ஆற்றலை எல்லா மக்களும் அறிந்து பயன்படுத்திக்கொள்ள சித்தர்கள் மூலமாக விளக்கியருளியுள்ளார்.

எனவே குருகுல மாணவர்களே நம் நாட்டு மூலிகைகளின்

ஆற்றலையறிந்து நோய்வந்தபோது அதன் மூலமாகச் சிகிச்சை புரிந்து கொள்ள முயல்வீர்களாக, எளிமையும், இயற்கையும், உண்மையும், திறமையும், நிறைந்தன நம் நாட்டு மூலிகைகள் என்பதை மறவாமல் பயன் படுத்துவீர்களாக.

ஒரு மாணவன் : ஐயா என் தகப்பனுர் சர்க்கரை வியாதியால் வருந்துகின்ருர் எத்தனையோ டாக்டர்கள் நவீன ஊசிகள், மருந்துகள் பார்த்தாயிற்று. நோய் நீங்கிய பாடில்லை. என்ன மூலிகையில் நீங்கும்.

தம்பி. எங்கும் மலிந்துகிடக்கும் முருங்கைக் கீரையைத் தொடர்ந்து சமைத்து உண்ணச்சொல்க வெறும் வயிற்றில் சிறிதுவேப்பிலையும்,துளசியும் மென்று சாப்பிடச் சொல்க. கிடைத்தபோது நாவல்பழம் சாப்பிடச் சொல்க மாதுளை பழமும் சாப்பிடலாம். இதைத்தொடர்ந்து நாவல்பழக் கொட்டையை கஷாயம் வைத்து உபயோகித்து வந்தால் இருக்குமிடம் தெரியாமல் மறையும் சர்க்கரை வியாதி. மனநிம்மதிக்காக முருகப்பெருமானை மறவாமல் தியானம் புரிவது நல்லது.

வேறு மாணவன் : என் தாயார் அவர்கட்கு அடிக்கடி குளிர்சுரம். நீண்ட நாட்களாகத் துன்பப்படுகின்றனர் என்ன செய்யலாம் ?

தம்பி. நீண்ட நாள் வேப்பமரத்தின் வேப்பம்பட்டையை நிழலில் உணர்த்தி லேசாக இடித்து மண் பானையில் ஒருபடி தண்ணீரில் இரவு அடுப்பில் வைத்துக்காய்ச்சி கால் படி கஷாயம் ஆகும்வரை சுண்ட வைக்கவேண்டும். காலை, பகல், மாலை இரண்டு தேக்கரண்டியளவு கஷாயத்தை சாப்பிட்டு வேண்டுமாயின் தேன் சிறிது சாப்பிடலாம். தொடர்ந்து நாற்பது நாட்கள் உண்டால் எந்த சுரமும் வராது. உடனே உன் தாயாருக்கு எழுதிச் சாப்பிடச் செய்க.

நல்லது நன்றி உடனே எழுதுகிறேன்.

(தொடரும்.)

## வயதாகியும் பருவமடையாத பெண்கள் பருவமடைய

கொட்டிக்கிழங்கின் மேலே இருக்கும் சுணையெல்லாம் நீக்கி மைபோல் அறைத்து கல் சுண்ணும்புடன் கலந்து அறைத்து மாலை வேளையில் உந்தி (தொப்புளில்)யில் தடவி வரவும். யோனியில் வாரம் இருமுறை தடவிவரவும் பூப்படைவாள்.

# வேலோடும் மயிலோடும் விளையாடிவா!

புவிவாழ முருகா நீ வரவேண்டுமே!-உன்
பொலிவான முகப்பார்வை பெறவேண்டுமே!
கவிபோலச் சுதிகூட்டும் மொழிவேண்டுமே!-இரு
கரம்நீட்டி சுகங்காட்டும் வழிவேண்டுமே!
தந்தைக்கு உபதேசம் பெய்தாயன்று!-ஔவைத்
தமிழ்ப்பாட்டிக் குளமாற்றம் செய்தாய்வென்று!
விந்தைக்கு வரம்பான தேவா உன்னை!-அடி
வீழ்ந்திங்கு வணங்குவேன் காவாயென்னை!
மூலிகை மணிகாத்து நின்ருளுவாய்!-திரு
முதலாகிப் பிணிநீத்து குன்றேகுவாய்!
ஞாலமே பரந்து பின் ஒன்ருகுவாய்!-மெஞ்
ஞானமே படைத்தென்றும் நன்ருகுவாய்!
இனிமைக்குத் தமிழாகிப் பேரானவா!-உரு
இளமைக்குத் தானுகிச் சீரானவா!
தனிமைக்கு மலைநாடி வேருனவா!-பெருந்
தயைகாட்ட மலர்முகம் ஆருனவா!
வேலோடும் மயிலோடும் விளையாடிவா!-வள்ளி
வேண்டும் மனமொன்றி விருந்துண்டுவா!
பாலன்பும் பழநெஞ்சும் சேர்த்தூட்டுவேன்!-நின்
பதம்சேர பவம்யாவும் தீர்த்தோட்டுவாய்!

எழுதியவர் :- மெக்கேல்பட்டி M. பிலவேந்திரன்

# மூலிகை தர்மம்!

— செ. இலட்சுமிகாந்தன்.

நகர்ப்புறங்களில் நாகரீகச் சின்னங்களாய் பல்வேறு பாணிகளில் நாள்தோறும் உருவாகும் வளமனைகள் (Bungalow) நவீன கட்டிடக் கலைக்கு கட்டியங்கூறி நிற்கின்றன. அவ்வளமனைகளின் எழிலுக்கு எழிலூட்ட சுற்றியுள்ள வெற்றிடங்களில் பலவண்ண செடி கொடிகள்; பூக்காத, காய்க்காத இலைகளின் அழகுக்காகவே வளர்க்கப்படும் செடிகள்; பூத்தாலும் மணக்காத அம்மலர்களின் வண்ணக் கோலத்திற்காகவே படரவிடப்படும் கொடிகள்; இவற்றிற்கு நாள்தோறும் வேளைதவருது நீரூற்றுவதற்காக மட்டுமல்லாமல், மாதந்தோறும், தன்னிச்சையாகத் தழைத்து நீளும் கொடி கொம்புகளை கத்தரிக்கோலால் நறுக்கி "சிகை அலங்காரம்" செய்து நல்லதொரு உருவம் கொடுக்க நீண்ட கத்திரிக் கோலுடன் நிற்கும் வேலையாட்கள் — இத்தகு காட்சி தனியாரது தோட்டங்களில் மட்டுமல்ல, பொது மன்றங்களின் பொறுப்பிலுள்ள பொதுப்பூங்காக் (Public Park) களிலும் காணலாம். இவை மக்களின் அழகு நுகர்ச்சிக்காக (Aesthetie Sensation) அதன் விளைவால் ஏற்பட்டவை ஆனுல் இவ்வெழிற் சோலைகளின் ஒரு பகுதியாவது, வீட்டுத் தோட்டத்தின் ஒரு சிறு பகுதியாவது உணவுப் பயன்தரவும், மருத்துவப் பயன்தரவுமான பகுதியாக மாற்றியமைத்தால் நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்ல பயனைத்தரும் முயற்சியாக அமையும்.

உணவுப் பயன் தரும் காய் கறிகளைப் பயிரிடுவதனுல் ஏற்படும் நன்மைகளை நாடறிய ஏடுகள் எடுத்தெழுதி வருகின்றன. ஆனுல் மருத்துவப் பயன்தரும் செடி, கொடி, மரங்களைப் பயிரிடுவதில் உள்ள நன்மைகளை உணர்ந்தோர் மிகக்குறைவு. இவ்வுண்மைகளை, மூலிகை மருத்துவத்தின் மகத்துவத்தை, நம்மைவிட நம் பாட்டிகள் நன்கறிவர். நம் வீட்டுப் பாட்டிகள் கைமுறையாக சில மருந்துகளைத் தயாரிக்கத் தெரிந்திருந்தும் அதைச் செய்விக்க முடியவில்லை. மூலிகைகளை இனங் கண்டு பறித்து வந்து கொடுக்கக் கூடியவர்கள் அவர்கட்குக் கிடைப்ப

தில்லை. வேண்டிய மூலிகைகள், வேண்டிய காலங்களில், வேண்டிய இடங்களில், வேண்டிய அளவு கிடைப்பதுமில்லை. இக்குறையால் தமிழ் மருத்துவம் அறிந்தோரும் அலோபதி மருத்துவத்தை நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது, இக்குறையை வளமனை வாழ்வோரும், வேளாண்மைத் தொழிலோரும், பொது வாழ்வுத் துறையினரும் மனம் வைத்தால் நீக்க வழியுண்டு.

நல்ல மனமும், சிறிதளவு இடமும், குறைந்த உழைப்பும் இருந்தால் போதுமானது. வீட்டுத் தோட்டங்களிலும், பூம்பொழில்களிலும் ஒரு மூலையிலாவது கொஞ்சம் இடத்தை ஒதுக்கி, ஆங்கே துளசி, திருநீற்றுப் பச்சை, கீழாநெல்லி, ஆவாரை, கரந்தை வகைகள், பற்பாடகம், அம்மான் பச்சரிசி, பேய்ப்புடல், தொட்டாற் சுருங்கி, மிளகுதக்காளி இன்னும் இவைபோன்ற மருத்துவச் செடிகளைப் பயிராக்கலாம். மலர்ச் செடிகளான செம்பரத்தை, ரோஜா, நந்தியாவட்டை, சாதிப்பூ, செவ்வரலி போன்றவற்றைப் பயிராக்கியும், மாதவிக் கொடியை பந்தலில் படரவிட்டாலும், நல்ல மணமிருக்கும், மனைக்கு அழகூட்டும், அனைத்தும் மருத்துவத்திற்குப் பயன்படும், இறைவழி பாட்டிற்கும் பயன்படும். இதன்றி மலரில்லாத, மலர்ந்தாலும் மணக்காத குரோட்டன்சு வகைச் செடி கொடிகளைப் பயிரிடுவதால் என்ன பயன்?

---

## தினமும் பல் துலக்கிவர

பொன்னுங் கொட்டை, உப்பு, இவைகளை சம எடையாக பொன் வரலாய் வருத்து இடித்து பொடி செய்து வைத்துக் கொண்டு நாள்தோறும் பல் துலக்கிவர பற்கள் ஆடாது பல் நோய் வராது. பல்லில் ஈறு கட்டாது புழுக்கள் சேராது ஆயுள்வரை பற்கள் விழாது பாதுகாக்கும்.

## குழந்தைகளுக்கு வயிற்று பூச்சி விழ

பூவரசம் விதையை அறைத்து சர்க்கரை சேர்த்து லேகிய பதமாக்கி கொண்டு சுண்டக்காய் அளவு கொடுத்துவர வயிற்றில் உள்ள நாக்குப் பூச்சிகள் யாவும் வெளியே வந்து விடும்.

அன்றியும், வேலியோரங்களில் நல்ல, வேம்பு, முருங்கை, பூவரசு, ஆமணக்கு, அகத்தி போன்றவற்றை வளர்க்கலாம். சுற்றுச் சுவர்களில் அல்லது வேலிகளில் தூதுவளை, உத்தாமணி, சீந்தில், பசளை போன்ற கொடிகளைப் படர விடலாம். ஆடாதொடையை உயர்வேலியாகவே பயிராக்கலாம். மழைக்காலங்களில் ஆடாத் தொடைக் குச்சிகளை ஒடித்து தரையிலே சொறுகினாற்போல்பதித்துவிட்டால் போதும், தழைத்துக் கொள்ளும். இந்த நற்பணியினால் தனது குடும்ப மருத்துவச் செலவு குறைவதோடு நோயுற்ற வேளைகளில் ஒருவிதத் தன்னம்பிக்கையும் ஏற்படும். தோட்ட வேலையாட்களின் உழைப்பும் அவர்கட்கு செலவிடும் பொருளும் நற்பயனைத் தரும். அத்துடன் அண்டை அயலிலுள்ளவர்களுக்கும் வேண்டும்போது வேண்டும் மூலிகைகளைப் பறித்துக் கொடுத்து "மூலிகை தர்மம்" செய்வதன் மூலம் இம்மைக்கும் மறுமைக்கும் நல்வழியைத்தேடிக் கொள்ளலாம். மூலிகை வித்துக்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு விரும்பியவர்கட்குக் கொடுத்து பயிரிட்டுக் கொள்ளச் செய்யலாம். வேருடன் பறிக்கப்பட்ட மூலிகைகளை (சமூலம்) மீண்டும் பயிரிட்டு அவ்வினம் அழிந்து போகாதபடி பார்த்துக் கொள்ளலாம்.

இதேபோன்று நகராட்சி, ஊராட்சி மன்றம் பொறுப்பில் உள்ள பூம்பொழில்களிலும் ஏராளமான அளவில் மருத்துவச் செடி, கொடி, மரங்களைப் பயிரிட்டு ஏழைகளுக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்யலாம். வித்துக்களைச் சேகரித்தும், செடி கொடிகளை சிறு சிறு தொட்டிகளில் வளர்த்தும் விற்பனை செய்யும் நர்சரிகள் ஏற்பட்டு வருவாய் தரும் ஒரு வணிகமாக மாறினால்கூட மக்களுக்கு நல்லதே. பொதுநல ஊழியர்களும், பெருமனை வாழ்வோரும் இப்பணியினைச் செயலாக்க மர நடு விழாக்களின் முக்கியத் துவக்கத்திற்குச் சற்றும் குறையாத வகையில் "மூலிகை நடு விழாக்களை" பொது இடங்களில் நடத்தினாலும் அதில் தவறொன்றுமில்லை. ஆனால் அவை வெறும் விழாக்களாகவே அமைந்து விடாமல் வாழையடி வாழையென தமிழ் மருத்துவம் தழைக்க வகை செய்ய ஆக்கம் தருபவையாக அமையவேண்டும்.

நாடு நெடுகிலும் இம்மூலிகைகளின் வளர்ச்சி பல்கிப் பெருகினுல், இவை மருந்து ஆராய்ச்சி வல்லுநர்களின் சோதனைக்கூடங்களில் இடம் பெற்று எங்கும், எப்பொழுதும் கிடைக்கும் வகையில் மூலிகைச் சத்துக்கள் திரவரூபத்திலும், மாத்திரை ரூபத்திலும் மாற்றியமைக்கப்பட்டு பெருமளவில் உற்பத்தியாகி விற்பனைக்குக் கிடைக்க வகையேற்படலாம். நாட்டு மருந்துக் கடைகளும் அலோபதி மருந்துக் கடைகள் போன்று எல்லா இடங்களிலும் ஏற்பட வழியேற்படும் இதனுல் அலோபதி மருந்துகளுக்கென்று செலவழிக்கப்படும் அந்நிய நாணயம் செலவாணி குறைவதுடன், தகுந்த விளம்பரமிருந்தால் இம்மூலிகைகளின் குண விசேடங்களை வெளி நாட்டினரும் அறிந்து ஏற்றுமதிக்குரிய பொருளாகிய அந்நிய நாணயச் செலவாணியை சம்பாதித்துக் கொடுக்கும். இவ்வாருக தமிழ் மருத்துவத்திற்கு ஒரு நல்ல எதிர்காலம் உருவாக நல்லவர்களும் வல்லவர்களும் பாடுபடல் வேண்டும். வளர்க மூலிகை இனங்கள்!

---

# எமது அடுத்த வெளியீடு!

## நாடிப்பார்த்தல்

★

நாடிப்பார்த்தல் என்ற தலைப்பில் நமது மூலிகை மணியில் தொடர்ந்து வந்த பயனுள்ள கட்டுரை. கூடிய விரைவில் புத்தகமாகி வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

மானேஜர்
மூலிகை மணி.

உ

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

(சென்ற மாதத்தொடர்ச்சி,)

## பசித்தூண்டி

வயிற்றிலுள்ள ஜடராக்கினியை உற்பத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்யும் பொருள்கள் ஆவன:—இஞ்சி, புதினா, பிரண்டை கருவேப்பிலை, பெருங்காயம், கொத்தமல்லி, பூண்டு, மிளகு, மிளகாய், திப்பிலி, வில்வ இலை, காய், பூ, பழம், பிஞ்சு, வெற்றிலை, வேப்பம்பூ, வெட்பாலை, வெட்சி, விழலரிசி, வெங்காயம், வெள்ளருகு, அரைக்கீரை, கள்ளி முளையான், முடக்கற்றான், முளைக்கீரை, முள்ளங்கி, வசம்பு, வாய் விளங்கம், மாதுளைப்பழம், தோல், பூ, ஏலம், மரவள்ளிக்கிழங்கு, மாசிப் பத்திரம், மாங்கொட்டை, மாம்பிஞ்சு, மர மஞ்சள், புளியாரைக்கீரை, பசலைக்கீரை, பற்பாடகம், பாகல், பிடங்குநாரி, தேற்றான் கொட்டை. இளநீர், தென்னங்கள் (புளிக்காதது) நிலவேம்பு, சுக்கு, சுக்காக்கீரை, தாளிசப்பத்திரி, சுண்டை. நற்சீரகம் சின்னி, சிறுகுறிஞ்சான், சீந்தில், சிறுநாகப்பூ, சிவகரந்தை, சதகுப்பை, கோஷ்டம், சித்ரமூலம், அக்காரப் பட்டை, ஓமம், சிற்றத்தை, அன்னசிப்பூ, பேய்மருட்டி, லவங்கம், இலுப்பை, லவங்கபத்திரி, கிச்சிலி காட்டு முள்ளங்கி, காட்டு சீரகம், காட்டு கருணை, காட்டு ஏலம், காட்டு எலுமிச்சம், களாகாய், கடுகு, ரோகிணி, கடாரநாரத்தை, கொத்துக்கடலை, குடசபாலை, கிட்டிக்கிழங்கு, கீரிப்பூண்டு, கடற்கொழிஞ்சி, கேக்குவிதை கொட்டைக்கரந்தை, அதிவிடயம், காட்டு கஸ்தூரி, ஆதண்டம், மோடிக்குச்சி ஆகியவையாகும்.

## பால் சுருக்கி

தாய்ப்பாலை சுரக்க ஒட்டாமல் தடுத்து குறைக்கின்ற(அ) வரட்டுகின்ற வஸ்துக்கள் ஆவன :—நாய்குடை, (வெள்ளைக்காளான்) ஜாதி மல்லிபூ, இலை, இருவாட்சி, பூ, இலை, நித்திய மல்லிபூ, இலை, அக்ரோட்டுப் பட்டை, வெண்கடுகு, ஆகியனவாகும்.

## பால் பெருக்கி

வரண்டுபோன தாய்ப்பாலை மீண்டும் சுரப்பித்து பாலை அதிகமாக்கும் வஸ்துக்கள் ஆவன :—பெரு அம்மான் பச்சரிசி, உளுத்தம்பருப்பு, ஆளிவிதை, உருளைகிழங்கு, இலுப்பைப்பூ, எலியாமணக்கு, சிற்றுமணக்கு காட்டாமணக்கு, செவ்வாமணக்கு, கலியாண முருக்கன், இலை, கருஞ்சீரகம், ஓரிலைத்தாமரை, எள்ளு, சிறுபுள்ளடி, காட்டுக்கருவாப்பட்டை, வெற்றிலை, வெந்தயம், நிலப்பூசணி, சீமை அத்திபழம், பாகற்காய் நாணல் ஆகியனவாகும்.

---

## அபின் சாப்பிடுவோர்!

மயக்க நிலையை உண்டு செய்து தன் சுய உணர்வை மறக்கச் செய்யும் அபின் பழக்கத்தை ஒருவன் மேற்கொள்ளுவானுகில் அந்த அபின் இல்லாமல் அவன் உயிர் வாழ முடியாது! எப்பாடுபட்டாகிலும் எங்கிருந்த போதிலும் அவன் அதைப்பெற்று உண்டால்தான் அவன் உயிர் நிற்கும்.

ஆங்கில மருந்தும் அதே தன்மையைத்தான் உண்டாக்கி விடுகிறது! நோயாளி, ஒரு தரம் ஆங்கில மருந்தை உட்கொண்டால் போதும் அது அவனை அபின் சாப்பிட்டவன் நிலையை உண்டாக்கி நோயாளியின் உயிரை உறிஞ்சிக்குடிக்கும் வரை அவனை விட்டு அகலுவதில்லை. ஆடு கசாப்பு கடைகாரனை நம்புவதுபோல, நவீன மருந்துகளை நம் நாட்டு மக்கள் நம்பி உயிரை மாய்த்துக் கொள்ளுகின்றனர்.

## பித்த நீர் பெருக்கி

உடலிலுள்ள பித்த நீரை அதிகரிக்கச் செய்யும் பொருள்கள் :—கரிசலாங்கண்ணி, பவளமல்லி, வரகரிசி, அக்ரோட்டுவிதை, கற்கடகசிங்கி வெட்சி பூ, நிலப்பூசணி, அகில்பட்டை, காப்பிக்கொட்டை, நிலக்கடலை பீன்ஸ், கொத்தவரை ஆகியனவாகும்.

## பித்த நீர் சுருக்கி

உடலில் பித்தநீரை அதிகமாக்க ஒட்டாமல் சுருக்கும் பொருள்களாவன!—கரிசிலாங்கண்ணி, பவளமல்லி, அருநெல்லி, கொத்துக்கடலை, எலுமிச்சை, நாரத்தை, சாத்துக்கொடி, ஆரஞ்சு, கடாரநாரத்தை, கிச்சிலி பெருநெல்லி, உருத்திராட்சம், தேவி செங்கழுநீர், பெரியா நங்கை, சிறியா நங்கை, சுரை இலை, நாணல், மூக்கிளிக்கீரை, விலாமிச்சுவேர், புளியம் பழஓடு, வாழைக்கட்டை, வாழத்தண்டு ஆகியவையாம்.

## புண்ணுக்கி

உடம்பில் பட்டமாத்திரம் ரணத்தை உண்டாக்குகின்ற பொருள்:—சிவப்பு சித்தரமூல வேர்ப்பட்டை, புன்னை விதை, சேராங்கொட்டை, பூனைக் காஞ்சொரி இலை, முள்ளிக்கீரை ஆகியனவாம்.

## புண்ணுற்றி

ரணங்களை ஆற்றி, அழுக்கை அகற்றும் பொருள்கள்:-கருஞ்செம்பை இலை, குப்பை மேனி இலை, அம்மான் பச்சரிசி இலை, அழவண இலை, வேங்கை இலை, சீத்தா இலை, மாஞ்செவிக்கள்ளி, சீமை அகத்தி இலை, நீரடி முத்துக்கொட்டை, கைப்பு வாதுமை, இங்கி மர இலை, அரிவாள் மூக்கு பச்சிலை, அக்ரோட்டுப்பட்டை, சீயக்காய் ஆகியவையாகும்.

(தொடரும்)

---

### மாத விடாய் உண்டாக

மாவிலங்கப்பட்டை, பூண்டு, மிளகு, இவை சம எடை சேர்த்து அரைத்து கொட்டைப்பாக்களவு காலை மாலை. மூன்று நாள் கொடுக்க மாதவிடாய் உண்டாகும்.

# "ஆசிரியர் மிஸ்டர் 'குட்' (MR. GOOD)"

★ இதயன் ★

இந்த நேரத்தில் ஒரு பத்திரிகை நடத்துவது எவ்வளவு கடினம், ஒரு அஷ்டாவதானமே என்பதும் என் கற்பனைக்கு மறவாமல் கொண்டு வருகிறது 'அரோகரா' பத்திரிகை. அதன் ஆசிரியர் மிஸ்டர் குட் (GOOD) அவர்கள் இப்போது ஏந்த அவதானம் புரிந்தால், பத்திரிகை அச்சாபீஸ் என்கிற சிறையை விட்டு வெளியேறும் என்ற ஆலோசனையில் ஆழ்ந்து கிடந்தார். கையிலே செப்பாலடித்த காசு இல்லை. கர்லையில், ஒரு – எந்த காலத்திலும் வளர்ச்சியுற போகாத 'எழுத்தாள ஆசை' ஒன்று, தன் கதையை 'அரோகராவில்' போடவேண்டும் என்பதற்காக ரூபாய் இருபத்தி ஐந்து, பத்திரிகையில் வளர்ச்சிக்கு என்ற பெயரால் லஞ்சம் கொடுத்துவிட்டு போனது. அதை அப்போதே அரோகராவின் ஆசிரியர் அரோகரா ஆக்கிவிட்டார். மனைவியிடம் இந்தா இன்றைய காலட்சேபத்துக்கு என்று கொடுத்து விட்டாரர்? அப்படியெல்லாம் அவர் செய்தால் பத்திரிகை நாசமானாலும் குடும்பம், வந்த காசுக்கு வட்டமில்லை என்கிற அளவுக்கு உருபட்டு விடுமே ! அவர், காசு கைக்கு வந்ததுமே. பீடியை உதறிவிட்டார், வில்லை பற்றினர். ஹோட்டல் தர்பாருக்கு தர்பாராகச் சென்றார். அவருக்கு என்னவோ ரூ. 25க்கும் சாப்பிட்டுவிட முடியாதுதான் — முடியுமென்றாலும் (விலையுயர்ந்த பண்டங்களை தருவித்தால், மலைவிழுங்கி மகாதேவனுக்கு, கதவு ஒரு அப்பளம் என்பதுபோலத் தான் மிஸ்டர் குட்டுக்கு' அது) அடுத்த வேளைக்கு என்ற பயத்தில் கொஞ்சம் வயிரை ஈரம் காயவைத்துக்கொள்ளவே நினைத்தார். பட்டலர் பரமு பாரீஸ் குட்டி வந்திருக்குது சார் என்றான், ஒரு புதுச்சேரி குட்டியைப் பற்றி. ஆசிரியருக்கு வயிற்றுப்பாடு கூட மறந்து விட்டது. குடும்ப கவலையும் மறந்து விட்டது. அச்சக முதலாளிக்கு என்ன சொல்வது என்பதும் கவலையில்லை. அவர் ஒரு பிரபுவைப்போல வில்லை ஊதிக்கொண்டு எழுந்தார்......!

அவர் மீண்டும் அச்சகத்துக்கு வரும்போது மணி பகல் இரண்டு. பல்லாயிரக்கணக்காக விற்பனையாகும் 'அரோகரா' 200க்கு மேல் என்றும் அச்சாகாததுபோல இன்றும் நின்று கிடந்தது. இன்றைக்கு மிக மிக மோசம். வயிற்றை பசி கிள்ளியது. 25 ரூபாயோ அப்போதே காற்றில் கற்பூரமாய் போய்விட்டது. மடமடவென்று ஒரு முப்பது பிரதிகளை எடுத்தார். ஆசிரியர் கழுதையாகி விட்டார்! என்ன அதிசயம் என்று வியப்பு வேண்டாம். ஒரு பத்திரிகை நடத்துவது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. அதனால் தான் 'குட்டைப்' போன்றவர்கள் பத்திரிகையையே தின்றுவிடும்படியாக ஏற்பட்டு விடுகிறது.

ஆசிரியருக்கு பசி தணிந்தது. பல்லாயிரக்கணக்காக செலவாகும் பத்திரிகையில் 200 அச்சாகி அதிலும் ஒரு முப்பது ஏப்பம் விட்டாகி விட்டது. இதற்குமேல் தலை சுழன்று விட்டது பிரஸ்காரனுக்கு. ஒரு பத்திரிகையை எடுத்து சாலையில் போகும் கழுதை ஒன்றுக்குப்போட்டான். கழுதை 'குட்டை'விட உயர்த்தி போலும், சட்டைகூட பண்ணவில்லை, நடந்துவிட்டது. இன்னும் விழி பிதுங்கி விட்டது அச்சகக்காரனுக்கு 'என் பத்திரிகையைப் பற்றி கழுதைக்கு என்னய்யா தெரியும்? கழுதை அறியுமோ கற்பூர வாசனை' என்று பேசினர் ஆசிரியர். அவருடைய மார்பு வாழையிலைபோல் பெருமித்தால் விரிந்து போயிற்று.

வெகு பரிதாபகரமாகப் போய்விட்டது அச்சகக்காரனுக்கு தன் அச்சகத்தை விட்டு பத்திரிகை நகர்ந்தால் போதும் என்றுகூட ஆகிவிட்டது. 'எடுத்துக்கிட்டு போய்யா உன் பத்திரிகையை' என்று அனுமதி அளித்துவிட்டார். சும்மாயில்லை, ஆசிரியரின் டெரிலின் ஷர்ட்டை கழற்றிக்கொண்டு 'பத்திரிகை நடத்துவது என்றால் எவ்வளவு தியாகம் பண்ணவேண்டியிருக்கிறது!' என்று கொஞ்சம்கூட வருத்தப்படாமல் டெரிலினை கழட்டிக் கொடுத்து விட்டார் ஆசிரியர். அவர் அப்படி நகர்ந்ததும், ' வந்தவரை லாபம் — மீந்தேன் ' என்று அச்சகக்காரர் ' அடேய்

---

## -: மூலம் நோய்க்கு :-

துத்தியிலை ஒரு பிடி, மஞ்சள் தூள் 6 கிராம் இரண்டையும் நல்லெண்ணையில் அரைத்து ஆசனத்தில் வெளித்தள்ளும் மூலத்தில் தடவிவர சதை வளர்ச்சி நின்று மூலம் தள்ளுவது நிற்கும்.

பையா' இந்த மாதிரி பத்திரிகை ஆசிரியர்களை உள்ளே விடாதே. ரொம்ப வேதனையாக இருக்கிறது. நமக்கு கொஞ்சம் நட்டமானாலும் தேவலை, ஏதோ முதன் முதலாக, ஒரு 200 பிரதி பாட்டதோடு, நம்ம கையைக் கடிச்ச சமாச்சாரம் விட்டுவிடட்டும்' என்று மேலே வேலையை கவனிக்கச் சென்று விட்டார்.

குட்டின்' புனைப்பெயர் 'குட்' 'குட்' என்ற பெயரில்தான் அவர் எழுதுவார் உண்மையிலேயே சொந்தமாகத்தான் எழுதுகிறார். ஆனால் அது அவருக்கே புரியவில்லை. 'இத்தனைக்கும் 10 பாயிண்ட்லேதானே போட்டிருக்கிறேன். இந்தத் தமிழ் நாட்டு வாசகர்களுக்கு ரசனை மட்டம். அவர்களுக்கு எப்போதுதான் என் பணி புரியும்? எப்பொதுதான் நாடு முன்னேறும்? அவர் ஒரு சமயம் இப்படி இந்த அரும் தமிழ் நாட்டை, அதன் மக்களைப்பற்றி ஒரு வேதனை வெண்பாவில் பாட்டாகவே கொட்டி விட்டார். அந்தோ தமிழ் நாடே!

சென்ற மாதம் 200 அச்சான 'அரோகரா' 50 கூட விற்பனை யாகாமல் ரிகார்ட் ஏற்படுத்திவிட்டது. அதற்கெல்லாம் மிஸ்டர் 'குட்' மூர்ச்சையாகி விடுவாரா என்ன? மடமடவென்று 'பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் வேண்டுகோளை முன்னிட்டு சென்ற மாத இதழையே மீண்டும் வெளிக்கொணருகிறோம்' என்று மிச்சத்தை அட்டைபோட்டு அனுப்பிவிட்டார். அட்டைக்கு பணம்?

---


# காக்கை வலி நிற்க

அசல் கற்பூரம் $\frac{1}{4}$ பலம் பெருங்காயம் $\frac{1}{2}$ பலம் வேலங்கோந்து 1 பலம் ஆக இம்மூன்றையும் பிராந்தி ஊற்றி நன்றாக அறைத்து பயறளவு மாத்திரை உருட்டி வைத்துக் கொண்டு உலர்ந்தபின், தினம் மூன்று மாத்திரை வீதம் தேனில் இழைத்துக் கொடுக்க காக்கை வலி இழுப்பு விக்கல் தீரும்.

அதைப்பற்றி கவலையில்லை. அச்சான 250 பிரதியையும் மிஸ்டர் 'குட்' பழைய புத்தகக்காரனுக்கு எடையில் போட்டு விட்டார், என்ன கிடைக்கும், மாளாது? அவரிடம் எப்போதுமே ஒரு பாலிஸி உண்டு. வந்தவரை லாபம் என்ற கொள்கை கோபுரம் அவர். ஒரு ஐந்து ரூபாய் கிடைத்தது. ஐந்து ரூபாய் கிடைத்து விட்டதே! ஹோட்டல் தர்பார் தான் இனி அவருக்கு. அங்கேதான் அவருக்கு அதிர்ஷ்டம் காத்துக் கொண்டிருந்தது. அந்த அதிர்ஷ்டம் அவரை நோக்கி நடந்து கூட வந்தது. பேசகூட பேசினது. ''சார், உங்க கட்டுரை அபாரம் சார்! 'முறுக்கும் பெண்கள் முறுக்கும்' பிரமாதம். சங்க இலக்கியங்களிலே இனிமேல் சாறே இருக்காது. பிழிந்து எடுத்துவிட்டீர்கள்—பிழிந்து!' என்றது அது. நான் என்ன சார், பிரமாதம்? ஆப்ரிக்க மேதை 'அழாக்குஜிஞா' எழுதியிருக்கான் பாரு, அவனிடம் ஐஸ்லாந்து, பார் படார், மடகாஸ்கார் மேதைகள் எல்லாம் பிச்சை வாங்கனும்!' என்று அடக்கமாக நவின்றூர்.

'நான் உங்க ரஸிகன் சார்' என்றது அந்த அதிர்ஷ்டம் ஆசிரியருக்கு புல்லரித்தது. மேசைமீது ஒரு ஈ காப்பி துளியில் சிக்கிக் கொண்டு தத்தளித்தது. பாடுபாவி ரஸிகன் அதை மீத்துவிட்டான் அவனை?......

'உனக்கு ஒரு பொன்னுடை போர்த்த வேண்டும், மிஸ்டர் ரஸிகன். நல்ல ரஸிகனை நாங்கள்தான் வளர்க்கவேண்டும். உங்கள் அட்ரஸ் கொடுங்கள். ஒரு விழா, சினிமாஸ்டார் மூக்கழகி மாவனூர் ஜில்ஜிலாம்பா தலைமையில், எடுக்கப் போகிறேன்.''

ரஸிகன் நாற்காலியிலிருந்து கீழே விழுந்து விட்டான் அவ்வளவு மகிழ்ச்சி.

---


## அடங்காத தாகம் நிற்க.

சுட்ட ரொட்டி துண்டுகள் நாலு, அடுப்பு கரி துண்டு இரண்டு ஒரு படி தண்ணீரில் போட்டு ½ படியாக காய்ச்சி அதை வடிகட்டி வைத்துக்கொண்டு அவ்வப்போது கொடுத்து வர தாகம் அடங்கும்.

'செலவுக்கு ஒரு நூறு ரூபாய் கொடுங்கள் போதும் உங்கமீது கவி கூட பாடுகிறேன்' என்ருர் ஆசிரியர்.

ரஸிகன் இலட்சுமி புத்திரன் போலும் 150 ஆக எடுத்து நீட்டி விட்டது.........

அரோகராவுக்கு அட்டை அச்சாகிவிட்டது. பகுதி ரூபாய் மிச்ச மிருந்தது. ரொம்ப வேதனைமிகுந்து விட்டது. ஆசிரியருக்கு, குடும்பத்தைப் பற்றி, ஒரு பத்து ருபாயை தாரர்ளமாக அங்கே அனுப்பிவிட்டு பாண்டிச்சேரிக்கு புறப்பட்டு விட்டார். அங்கே அவருக்கு ஒரு அழைப்பு-குடி ஒழிப்பு மாநாட்டுக்கு. இவர் ஒரு பத்திரிகை ஆசிரியர் ஆயிற்றே! அழைத்து இருந்தார்கள்-ரயில் சார்ஜ் அனுப்பி, அன்றைக்கே அது தர்பார் ஓட்டலில் குடித்தாகிவிட்டது. இன்றைக்கு அவர் 'டெல்லியில் ஸ்ரீ ஜவஹரை பேட்டி காணப்போவதால் வர இயலாது என்று, புதுச்சேரிக்கு ட்ரங்கால் போடுவதாக இருந்தார். அதற்குள் ரஸிகன் என்ற உருவில் அதிர்ஷ்டம் வந்துவிடவே புறப்பட்டு விட்டார் புதுவைக்கு 'உங்களை' இந்த இடத்தில் மாநாடு போட்டமைக்கு வாழ்த்துகிறேன், வணங்குகிறேன், பாராட்டுகிறேன்' என்று பேசினுர். அங்கு குடியொழிப்பு மாநாட்டில் சுருண்டு ஒருவர் விழுந்து விட்டார். நிச்சயமாக அவர் குடிமயக்கத்தில்விழவில்லை.

---

## புற்று நோய்கள் புண் புதைகளில் உள்ள புழு கிருமிகள் வெளிப்பட

(1) மூங்கில் குறுத்தை அறைத்துக்கட்டினல் கிருமிகள் வெளியாகும்.

(2) கற்பூரத்தை எருக்கன் பாலில் அறைத்துத் தடவி, குதிரை லத்தியை நெருப்பிலிட்டு வரும் புகையைக் காட்ட புழுக்கள் வெளிப்படும்.

(3) நண்டு வளை மண்ணைக்கொண்டு வந்து அதைப்பூசி வைத்தாலும் கிருமிகள் புழுக்கள் வெளிப்படும்.

பிறகு வேப்பம்பட்டையை கஷாயமிட்டு கழுவிடவேண்டும்.

மிஸ்டர் 'குட்' புதுச்சேரியிலிருந்து வெற்றிகரமாக திரும்பினுர். ரயிலில் இடம் காலியாக இருக்கிறது என்று ஒரு ஆள் மீது உட்கார்ந்து விட்டார். ஒரு பத்திரிகாசிரியர இவ்வளவு நாற்றமடிப்பதா என்று அந்த பிரயாணி அவர் பெருமையறியாமல், அந்த நாற்றத்தின் அருமையறியாமல் கீழே தள்ளி விட்டார்.

பத்திரிகாசிரியர் அடுத்த மாத இதழை கொண்டு வரவில்லை அதற்கு அடுத்த மாத அரோகராவும் நின்று விட்டது. அதற்கு அடுத்த மாதம் இரண்டு இதழ்களையும் சேர்த்து ஒன்ருக வெளியிட்டு வாசகர்கள் மன்னிப்பை வேண்டிக்கொண்டார். அவர் என்ன செய்வார் பாவம், மிஷின் கெட்டுவிட்டால்? அப்புறம் அரோகரா அச்சானது, புதியதாக தருவித்த மிஷினில்தான்.

அந்த புதிய மிஷினும் அடுத்த மாதம் பழுதடைந்து விட்டது. அதற்கு ரஷ்யாவிலிருந்து ஒரு உறுப்பு தருவிக்கவேண்டியதாயிற்று. அது இலேசில் வரவில்லை. ஒரு மாதமாகி விட்டது. அப்புறம்தான் பத்திரிகை வந்தது.

அடுத்த மாதம் 'ஒழுங்காக பத்திரிகை வந்தது. எண்ணி இருபது இதழ்! விளம்பரதாரர்களுக்கு மட்டும் கடைசியில் பத்திரிகை நின்றுவிட்டது. மிஸ்டர் 'குட்' வெகு வருத்தமாக ஒரு அறிக்கை வெளியிட்டார், இந்த தமிழ் நாட்டைப்பற்றி. கடைசியில் 'அறம்பாடியே' தீர்த்து விட்டார் ஆனுல்,

இப்போதும் அவர் 'அரோகரா' பத்திரிகை ஆசிரியர்தான், அரோகரா செத்துவிட்டால் அவர் இல்லையா, என்ன? நிறைய இலக்கிய சொற்பொழிவுகளுக்குப் போகிருர். விளம்பரத்தாளில் அரோகரா பத்திரிகை ஆசிரியர் திரு 'குட்' என்றுதான் தவருது விளம்பரம் செய்யப்பட்டது. 'அரோகரா' நின்று பத்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. அது வந்ததே மொத்தம் 12 மாதம். அதாவது மாதம் ஒன்று என்று ஐந்து இதழ்- வருடமெல்லாம் வந்தது. இந்த ஐந்தில் ஒரு இதழ் ஒரு ஃபாரமே (மொத்தமே அது இரண்டு ஃபார பத்திரிகை) அப்போதுதான் மிஷின் கோளாறு ஆகி விட்டது. பாவம், திருவாளர் 'குட்' இந்த பத்தாண்டுகளுக்குள் அவர் புகழ் பெரிதும் மங்கித்தான் விட்டது. அதை புதுப்பித்துக்கொள்ள அவர் சீக்கிரமே இன்னெறு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்து விடுவார். எவனுவது கிடப்பான். ஆரம்பித்தால்தான் ஆயிற்று இல்லையேல் பிழைப்பே இல்லை. நன்றிகெட்ட மக்கள் 10 ஆண்டுகளுக்குள் அரோகராவையும், அதன் ஆசிரிரையும் மறந்துவிட்டால்—உய்வு உண்டா அவர்களுக்கு? வேதனைக்குள்ளானுர் மிஸ்டர் 'குட்'.

அவர் பத்திரிகை ஆரம்பித்ததென்ன, அவர் தேர்ண்டு என்ன அவர் வளர்ச்சி என்ன, வீழ்ச்சி என்ன, இந்த நன்றி கொன்ற தமிழ் நாடுக்கு வந்தது என்ன ?

இதிலிருந்து அவர் படிப்பினை ஒன்று தெரிந்துக்கொண்டார். முன் போல அவர் இப்போது பத்திரிகை ஆரம்பித்தால் இலக்கியம், மொழி, நாடு, நாகரீகம் என்று ஒரு இலக்ஷிய நோக்கோடு ஆரம்பிக்க மாட்டாராம். வெறும், தனக்கொரு விளம்பரத்துக்காகத்தான் ஆரம்பிக்கப்போகிறாராம் அந்த விளம்பரந்தானே இப்போது மங்கிவிட்டது? ஆனால் அவர் அதை ஒப்புக்கொள்ளுவதில்லை. இலக்கிய சேவைக்காக, நாட்டு சேவைக்காக மொழி சேவைக்காகத்தான் ஆரம்பித்து லக்ஷக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைந்து விட்டதாகக் கூறுகிறார். குடும்பத்தையே கவனிக்கவில்லையாம். எவ்வளவு மர்பெரிய தியாகச் செம்மல் அவர் ! அவரை இந்த தாயகம் புரிந்துகொண்டு ஆதரவு நல்காமல் போய்விட்டதே! வீழ்க அது ! வாழ்க அவர் வருத்தம் !

அவர் இப்போது 'அரோகரா ஜுனியர்' என்று ஒரு பத்திரிகை தொடங்கி விட்டார். இது அசல் அவர் விளம்பரத்துக்குத்தான் என்று மறைக்காமல் சொல்லுவதாகவே இருந்தது அதன் முதல் கட்டுரை. அதில் வெளு வெளு என்று வெளுத்து வாங்கி விட்டார் அனைவரையும். பின் எதற்கு ஜுனியர்? கோவிந்தா போட்டுக் கொள்ளவா? அது வாழத்தானும் இந்த வெளுத்து தீர்த்தல் என்கிற 'அறம் பாடல்'. முதல் இதழிலேயே அவருடைய அறம்பாடலால் அந்த நபர்கள் மாளவில்லை. 'ஜுனியரே' மாண்டு விட்டது. இரண்டாவதுகூட வந்ததில்லை. இப்படியுமா ஒரு அறம் பாடும் சக்தி ?

குதிரையைக் கொண்டு வண்டியோட்டி பிழைக்கிறவன், கொள்ளும் பில்லும் வைக்காமல் குதிரையையே சாக அடிப்பானா? பத்திரிகைக்குபோட வேண்டிய பணத்தை எல்லாம் ஏப்பம் விட்டு விட்டால், குதிரையை சாக அடித்த கதைதானே ?

(முற்றும்.)


## சகல கீல் வாய்வு இடுப்பு வலிகளுக்கு

அசல் கற்பூரம் ½ பலம் அதில் 2½ பலம் தேங்காய் எண்ணையைக் கலந்து பிராந்தி 30 துளி கலந்து வைத்துக்கொண்டு வலி எங்கு எடுத்தபோதிலும் அங்கு விட்டு சூடு பறக்க தேய்க்க வலி காணாது ஓடும்.

ஓம்
தத்வமசி.

# "படை வெல்லும் மூலிகைகள்"

1. பக்தர்க்கு இரங்கித்தன்னைப்
பார்த்தருளக்காட்சி செய்யும்
முக்தர்க்கும் முக்தன்றனை
மூதறிவு ஞானியான
சித்தர்க்கும் சித்தனறனை
சிவாய ஓம் நாமத்தானை
எத்திக்கும் எப்பொருளுமாகி
இயங்கும் ஓர் பராபரம் போற்றி.

2. பெரியோர்க்கு வணக்கஞ் சொன்
பெரிதான மூலி கண்ட (னேன்
உரியோர்க்கு வணக்கஞ் சொன்னே
உண்மைக்கு உரிய தன்மை (ன்)
அரிதாகக் கொண்ட நும்மை
அன்பாலே வணக்கஞ் செய்தேன்
பரியோடு படித்துப் பார்ப்பீர்
பரிகாசம் செய்யாதீர் என்னை

3. நீண்ட நெடும் நாளில் எண்ணி
நெஞ்சில் நான் கொண்டதாமோர்
தோன்றியஎண்ணந் தன்னைத்
திறந்துரை செய்ய வின்று
வேண்டியே கூப்பி யும்மை
விழைந் தனேன் விரும்பலென்று
காண்டரும் பெருமைத் தமிழால்
கற்ற நற்பாட்டைக் கேளீர்

4. **சீனத்து வெறியன் ஓட!**
**சேர்ந்துடன் பாக்கிஸ்தான்**
மானத்திற்காக நம்மை [ஓட!
மதியாலே காத்துக் கொள்வோம்
யான் சொல்லக் கேட்போரில்லை
அறவாழி நீரும் கண்டாய்
வான் ஒத்த வைத்யப் புலமை
வையத்தில் கொண்டாய் அதனால்

5. தேன் ஒத்த பாட்டைச் சொல்லி
தீந் தமிழின் ஆற்றல் தூண்ட
யானிந்த வழியைச் சேரன்னேன்
அறிந்த நீர் அறிவீர் மேலும்
நூல் கற்ற புலமையாலும்
நுண்ணறிவுத் திறமை யாலும்
மேல் எட்டச் செய்தி விடுப்பீர்
மேற்கொண்டு பலனைக் காண்பீர்

6. **மப்பூடு என்ற மூலி**
மனிதர்க்குத் தொட்டால் போதும்
பிப்போடு தோன்றும் அரிப்பு
பிறந்தநாள் கண்டு போகும்.
எப்பாடு படுவார் காணேன்
இயம்பினுர் பெரியோர் சொல்ல
தப்பாது பலனைக்காண
தனக்கொரு வழியைக்கண்டேன்.

7. **மாமூலி தன்னைக் கொண்டு**
மயங்காதே பாகங் கண்டு
தாமொத்த கருவி தன்னில்
தமர்மூடி அடைத்த பின்னே
வாவென்று எதிரி தன்னில்
வலிதாக வெடிக்கச் செய்தால்
ஆவென்று அலறிப் பேயவார்
அடடா மூலி பலனைக் கேளே!

8. பல்வேறு கருவி தன்னில்
பாங்காகக் காத்து வைத்தால்
எல்லோரும் மெச்சிப் போற்ற
இந்நாட்டுப் படைகள் வெல்லும்
கொல்லாத நெறிகள் மேலும்
குறையாத சக்தியாகும்
நல்லோர்கள் ஏற்கக் காண்போம்
நம்தெண்ணங் கூடுமன்று.

9. கொடுமைக்கு ஏற்பச் செய்யக்
குறித்திடும் வழிகள் உண்டு
இடும் உணவருந்து நீரும்
இயல்பறிந்து செய்ய வேண்டும்
கடும் பகை கொண்ட தீயர்
களத்தினில் கண்ட போது
விடும்பல வெடிப்பினலே
விளைந்திடும் கோரம் என்னே!!

10. கண் மூக்குச் செவிகள்தோறும்
கலந்தாடும் மூலி தன்னல்
அந்நேரந் தொட்டுப் பிப்பு
அடடா சொல் அரிப்புக் கூட
தன்னலே தாங்கமாட்டார்
தவிப்பாரே ஓடியாடி
முன்னலும் பின்னலும் தோன்ரு
முடிவேதும் இல்லை கண்டீர்.

11. கண்ணேக்கிப் பார்க்க மாட்டார்
காதூன்றிக் கேட்கமாட்டார்
புண்ணுக்கி மேல்கால் எங்கும்
புரியாதே விழித்துப் படுவார்
தான் நோக்கி வந்த செயலை
தடுமாறி விட்டுப் போவார்
வீண் என்று எண்ணுதீர் ஐயா
வினையோடு எண்ணிப் பாடும்!

12. படை கொண்டு செல்ல முடியா
பார்த்தறிந்து வழியில் செல்ல
இடை மறித்த திரையினலே
இயலாது கேட்க யாதும்
முடியாது கையில் ஏதும்
முடிவான செயலில் ஆற்ற
கடிதான மூலியாற்றல்
கருவியை இயக்கும் மனிதர்

13. முடமாகிப் போகச் செய்யும்
முற்றுந் தாம் செய விழுந்தால்
இடம் மாறிம் போகும் வெற்றி
எந்நாளும் நமக்கேயாகும்
**விடமாட்டோம் இந்த மூலி**
விடமாவ தொன்று மில்லை
தொடும் முன்னே நம்மர் சூழ்ந்து
துயர் போக்க வழியைக்கேளே.

14. படைக்கலன் விட்டுப் போவார்
பகுத்தறிவு கலங்கிப் போவார்
துடைக்கின்ற வழியைக் காணுர்
துயராலே தோற்றுப் போவார்
அயராது செய்ய வேண்டும்
அடுத்தாலே முடியும் இன்றே
வயதான மூதறிஞர் உம்மை
வாழ்த்தினேன் விரிக்கவென்று.

15. கண்ணிருந்தும் குருடராவார்
காதிருந்தும் செவிடராவார்
கையிருந்தும் முடவராவார்
காலிருந்தும் நொண்டியாவர்
வாயிருந்தும் ஊமையாவார்
வன் னெஞ்சம் அழிந்து போவார்
மெய்யிருந்தும் பிண்டமாவார்
மேலும் ஓர் செயலைக் காணுர்.

16. அணுக் குண்டு என்ன செய்யும்
அடுத்துத்தான் பலக்கருவி
அடைவாரே என்ருல் கேளும்
அதனலே பலனுமில்லை
விடையாது என்ருல் சொல்லேன்
விளையாட்டு இல்லை கேளீர்
படை போதும் என்ருல் கூட
பகர்வார் தாம் என்ன சொல்வீர்.

17. உளவுக்கோர் படையுமுண்டு
ஊடுருவிப் பின்னால் அந்த
தளத்தில் போய்க் குறித்து வைக்க
தவறாது மூலி தன்னால்
விளையும் ஓர் விளைவிற் கெல்லாம்
விதிதானே பின்னால் செல்லும்
அலைமோதிப் படுவார் களத்தில்
அவராலே யாது முடியும்

18. குணம் ஒத்த மூலி தன்னை
குறித்து நல் விளக்கந் தந்து
பணமின்றிப் படைகள் வெற்றி
பாங்காக அடையும் என்று
இனும் உள்ள வழிகள் கூறி
இதனை நீர் முடுக்கி விடுவீர்
அணுவேனும் பிழைகள் இல்லை
அறிவோர்கள் மேலோர் எல்லாம்

19. விஞ்ஞான விற்பன்னர் கூடி
விளைவாகும் பலனைத் தேர்ந்து
எஞ்ஞான்றும் ஆய்ந்து காண்பார்
இயலாத தொன்றுமில்லை
மெஞ்ஞானப் பெரியோர் செய்த
மேலான வழியே இன்று
அஞ்ஞானப் பேய்கள் ஓட
அறிந்தாரே மூலி யன்றே.

20. எதிரிக்குத் தெரியாதிந்த
இயல்பான மூலி மட்டும்
விதியாவும் அறிந்தே மேலோர்
வேண்டிய மட்டும் உள்ளார்
அவர்கூடி ஆய்ந்து காண்பார்
அளவோடும் குணத்தோடும் படை
திறமாகக் காக்கக் கருவி [கள்
செய்தாலே போதுந் திகைடாய்
கண்

21. கண் மூக்குக் கருவி மேலும்
காதோடு வாயும் மூட
பின்னுள்ள உடலில் யாவும்
பிழையாது காக்கும் உடைகள்
எந்நாளும் முடியும் நம்மால்
இயலும் ஓர் உறுதி கொண்டால்
பிந்நாளில் வியப்பார் இதனை
பெரிதாக அணுவிற் கொப்ப

22. துப்பாக்கி வெடியும் வேண்டாம்
துணைக்கொரு நட்பும் வேண்டாம்
சிப்பாய்கள் கொல்ல வேண்டாம்
சிறிதேனும் செலவு வேண்டாம்
தப்பாது வெற்றி கேளும்
தாமாக வலிந்து தேடும்
ஒப்பாரும் மிக்காரும் இங்கே
ஒரு நாளும் உண்டோ சொல்வீர்.

23. அற்பமாக எண்ணிப் பொருளை
அலக்ஷியம் செய்த பேர்கள்
கற்பமாய்ப் பின்பு கண்டு
கலங்கிடச் செய்தல் உண்டு
இத்தகை உண்மை கூறும்
சித்தர்கள் சரிதம் கண்டோம்
மெத்த நீர் மேலும் மூலி
மிகவுள இதனைப் போல

24. எளிதிலே எதிரி தோற்க
இயம்பிடும் வழிகளாலே
பழியேதுமில்லை கண்டீர்
பண்பாளர்க்கேது சொல்வேன்
சில சொல்லி முடித்துக் கொள்வேன்
சிற்றறிவினாலே இந்த
நலந்தனை எண்ணிச் சொன்னேன்
நல்லோர் பிழை பொறுத்துக
கொள்வீர் !

(T.M.T. தாராபுரம்.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# அவள் குணம் பெற்றுள்

—வேலை வாணன்'

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சின்னஞ் சிறிய குடிசை. தகரக் குவளையும் ஓட்டைச் சிம்னி விளக்கும்—ஒழுகும் தண்ணீர்ப் பானையுமே அங்கிருந்தன. பக்கத்திலே கிழிந்த பழம் பாய். அழுக்கேறிய துணிச் சுருணை அதன் மீது தலை வைத்து 'லொக் லொக்' கென்ற இருமலோடு அவள் படுத்திருந்தாள். அவளருகே கண்ணீரோடு அவன்.

இப்போதோ—இன்னும் சில மணி நேரமோ என எதிர்பார்த்தான் அவன். அவனுக்கென்று இந்த உலகில் யாருமே இல்லையா? அவனருகே சில மருந்துச் சீசாக்கள் காலியாக இருந்தன. அவள் அவன் மனைவி. அவனுக்கு வேண்டியவள். அவளைத்தான் அவன் காப்பாற்ற வேண்டும் ஆனல் ...!

அவன் மனம் அன்று காலையிலே நடந்த சம்பவத்தை எண்ணிப் பார்த்தது. ஏக்கப் பெருமூச்சுவிட்டது. இப்படி நடக்குமென்று அவன் கனவிலும் எண்ணிப் பார்க்கவில்லையே!

அவளை எப்படியாவது' 'பெரிய ஆஸ்பத்திரி' யில் சேர்த்துவிட வேண்டுமென்று அவள் 'சீக்காய்ப்' படுத்த நாள் முதல் எண்ணம். அங்கிருப்பவர்கள் எல்லாம் கருணைவான்கள். பிறர் மீது இரக்கப் படுபவர்கள். நோயாளிகளை நெருங்கி அவர்கள் கஷ்டம் தீர அன்புகனியப் பேசுகிறவர்கள்" என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தான்.

அதுமட்டுமா ? அங்கிருக்கின்ற நோயாளிகட்கும் — நோயாளிகளோடு துணையாக இருப்பவர்கட்கும் அவர்கள் தொண்டைப் பற்றியும்-தியாகத்தைப் பற்றியும்-பிறருக்கு உதவி செய்வதைப் பற்றியும் கதை கதையாகச் சொல்வதைக் கேள்விப்பட்டிருந்தான். அது மட்டுமா? தமிழிலே சில வாசகங்களை அச்சடித்து எல்லாரிடமும் கொடுப்பதை பார்த்திருக்கிறுன்

எனவே அந்த மனிதர்கள் தன் மனைவியைக் காப்பாற்றி விடுவர் என்ற சபலம், இருக்காதா? ஏழையாயிற்றே! ஏதுமறியாதவனாயிற்றே! என்ன செய்வான் ?எப்படியாவது தன் மனைவி பிழைத்தெழுந்து வீட்டுக்கு ஒரு இலட்சுமியாய் இருக்க மாட்டாளா என்ற எண்ணம் கிளைவிட்டோடியது.

எனவே அன்று எப்படியோ இருக்கிற சில்லறையைத் திரட்டி மனைவியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக முனைந்தான். "நான் செத்தாலும் வீட்டிலேயே சாவேனே தவிர அங்கே போய் செத்து என்னை சாவுக் கிடங்கிலே போட்டு அறுக்கவேண்டாமென" அவள் சொன்னாள் கணவனிடம்!

ஆனால் அவன் அவளை சாகவிடவா அழைத்துப்போக விரும்பினான். இல்லை! குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு பல்துலக்கி ஒரு முழுங்கு வென்னீரை வாயில் ஊற்றி அவளை ரிக்ஷாவில் அழைத்துப் போனான்.

எங்கே? பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான். புதிய சீட்டு வாங்கிப் போயமர்ந்தான். மணி எட்டு. எப்படியோ மனைவியை மாடிப்படியேற வைத்து அழைத்துப் போய்விட்டான். அங்கிருந்த பெஞ்சியின் மீது அமர்ந்தனர் இருவரும். 'அரைநிஜார்ப்' பையன் ஒருவன் சுமார் இரண்டு மணி நேரம் கழித்து யாரையோ பார்த்து கூப்பிடுவது போல 'மருதாயி— மருதாயி' என்றான். நமது நண்பன் தனது மனைவியின் பெயரைக் கேட்டதும் எழுந்து நின்றான்.

"இந்த உண்டியிலே எட்டணா போடு" என்றான் பையன். இவன் சட்டையைத் துழாவி எட்டணா போட்டான். "போய் உக்கார் ...... டாக்டர் கூப்பிடுவார்" என்றான். எழுந்து நின்ற மருதாயியை மீண்டும் உட்காரச் செய்து டாக்டரின் புனிதக் குரலுக்குக் காத்திருந்தான். டாக்டர் வந்தார் 'கலகல' வென்ற சிரிப்பொலியோடு! அவர் பின்னால் யாரோ "ஐயோ......அம்மா......வலி தாங்கலையே! என்றகுரல் கேட்டது.

பக்கத்திலே இருந்த ஒருவர் "டாக்டர் எங்கே போனார்?" என்றார். இன்னொருவர் காபி சாப்பிடப் போயிருப்பதாக நர்சம்மா சொன்னாங்க", என்றார். மருதாயி உட்கார முடியாமல் அப்படியே பெஞ்சியின்மீது சாய்ந்தாள். டாக்டர் போய் சரியாக முப்பது நிமிடம் கழித்து யாரையோ பார்த்து முறுவித்தவண்ணம் வந்தார்.

பையன், "மருதாயி...மருதாயி...!" என்றான். அவள் மெல்ல எழுந்தாள். அவள் கணவன் அவளை டாக்டரிடம் அழைத்துப் போனான்.

''நீர் வெளியில் உட்காரும்'' என்றான் பையன். மனைவியை அனுப்பி விட்டு சோர்வாக அமர்ந்தான். உள்ளே போன மருதாயி திரும்பி வந்து 'இதுக்கெல்லாம் பணம் கட்டணுமாம்' எனக்கூறி அவனிடம் ஏதோ சொன்னாள். அவைகள் எல்லாம் ஆரம்பப் பரீட்சைகள். பின்பு அவளைப் பற்றிய பரிசோதனை.........!

மலம் - இரத்தம் என்றெல்லாம் சின்னஞ் சிறிய நோய்க்கட்கெல்லாம் பணம் கட்டி - அதைப் 'பெரிய புராணம்' போல எழுதிவைத்து 'அடிக்கடி வந்துக்கொண்டிரும்' இங்கே! உன் டைரி - உன் நோய் பற்றிய தலையெழுத்து இங்கே உள்ளது என்பது போல இருந்தது அவர்கள் பேச்சு. மருதாயிக்கு பூர்வாங்கப் பரிசோதனைகள் முடிந்தன.

பின்பு அவளை டாக்டர் சோதிக்க ஆரம்பித்தபோது 'திபுதிபு'வென சில டாக்டர்கள் ஓடிவந்தனர். பத்து நாள் காய்ந்தவன் கம்பங்கொல்லையில் நுழைந்தால் கதிர்களை வைப்பானா? மருதாயின் கண்களைத் தொட்டார் ஒருவர். கைகளைப் பார்த்தார் ஒருவர். ''உனக்கு என்ன கஷ்டம்?'' என்றார் இன்னொருவர். ''இப்படி எத்தனை நாள்?'' என்றார் மற்றொருவர். ஆளுக்குமேல் ஆள் - கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு அவளை திக்குமுக்காட வைத்தனர். பாவம்! மருதாயி திணறிப் போய்விட்டாள். அவள் கூட வீட்டில் ஒரே ஒரு குழந்தைக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறாளே தவிர பல குழந்தைகட்குப் பதிலளித்துப் பழக்கமில்லை.

பிறகு சின்ன டாக்டர்கள் போன பிறகு சீனியர் டாக்டர், உன் புருஷனுக்கு என்னவேலை எவ்வளவு சம்பளம்?'' என்றெல்லாம் கேட்டார். ஏழைப் பெண்! என்ன செய்வாள்? தான் ஏழடுக்கு மாளிகையில் இன்பமுடன் வாழுகிறேன் என்று சொல்லுவாள்.

'எக்ஸ்ரே' எடுக்கவேண்டும். இது இல்லையென்றால் நோய் தெரியாது. சரி! மருதாயி பிழைக்க அவன் எப்படியோ உருட்டிப் பெறட்டி ரூபாய் பத்து கொண்டு வந்தான். எக்ஸ்ரே அறை...... அங்குப் பொடிப் பையன்கள் சிலர். 'கம்மலைக் கழற்று' என்றான் ஒருவன் எங்கோயோ பார்த்து கம்மல் இருந்தால்தானே! அதற்கு முன்புதான் ஒரு அம்மாள் 'சவுரியை' அவிழ்த்துக்கொண்டிருந்தாள். மருதாயியை எப்படியோ உட்காரவைத்து படம் பிடிக்கப்பட்டது! பின்பு மருந்து ஒரு வாரத்திற்கு அந்த மருந்து வாங்குவதற்குள் போதும்போதுமென்றாயிற்று அவள் கணவனுக்கு.

"இதற்குத்தான் நான் வேண்டாமென்றேன் கேட்டீர்களா என் பேச்சை" என்முள். அவனுக்கு ஒரு சபலம். "பணம் பிடுங்கியும் பல் வலி போகவில்லை" என்பதை அறியாமல் அழைத்து வந்ததின் காரணம் நம் மனைவி பிழைத்தால் போதுமென்று! ஆனல் அவர்களோ! அப்பப்பா! ஒரு நோயாளி வந்துவிட்டால் போதும். அவர்களை ஆயிரத்தெட்டு கேள்விகள் கேட்டு துளைத்துவிடுகிருர்கள்.

மருதாயிக்கு எவ்வளவோ மருந்தும் மாத்திரைகளும் தரப்பட்டது. ஆனல் அவள் குணம் பெறவே இல்லை. பாவம்! அவன் கண்ணீர்விட்டு நின்முன். கையில் பணமில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. பெரிய ஆசுபத்திரி மருந்தும் நல்ல பலன் தரவில்லை. என்ன செய்வான் ? மனைவி யுடன் வீடு வந்து சேர்ந்தான்.

அன்று .........

அவன் அந்த சின்னஞ்சிறிய புகைவண்டி நிலையத்தின் அருகில் அமர்ந்திருந்தான். பக்கத்தில் சிமெண்ட் பலகை. அதன் மீது சற்று நேரத்திற்கெல்லாம் தூய வெண்ணிற ஆடை அணிந்த ஒரு பெரியவர் வந்து அமர்ந்தார். பரந்த நெற்றி கூர்மையான பார்வை. சின்னஞ் சிறிய அந்தக் குறுந்தாடியை மெல்ல தடவி அக்கம் பக்கம் பார்த்தார். அவர் வாய் அதற்குள் பலமுறை 'முருகா, முருகா'வென உச்சரித்தது. நெற்றியிலே நீறு பூசி இருந்தார்.

அவருடைய பார்வை திடீரென தனிமையிலே தலை கவிந்து கண் களிலே நீர்மல்க அமர்ந்திருக்கும் மருதாயின் கணவன்மீது பட்டது. முருகாவென உச்சரித்து "ஏனப்பா...... என்ன முகவாட்டம்" என்ருர். அவன் இவரைப் பார்த்ததும் திடுக்குற்முன். அவருடைய முகம் ஏதோ ஒரு தெய்வீகக் கலை நிரம்பியதாக இருந்தது.

"யாரப்பா நீ......?" என்ருர்.

அவன் கண்களிலே நீர்மல்க, "நான் ஒரு கூலிக்காரன் ஐயா .... மூட்டை சுமப்பவன். என் மனைவி சாகக் கிடக்கிருள். எவ்வளவோ வைத்தியம் பார்த்தோம். அவள் பிழைப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கவலையே என்னை வாட்டி வதைக்கிறது" என்முன். அவர் புன்முறுவல் பூத்து, "மனிதன் சோகத்திற்கு கண்ணீர்விடக்கூடாது. அப்போதுதான் அவன் மன உறுதியோடு இருக்கவேண்டும்" என்ருர்.

உடனே அவர் அவனைப்பார்த்து, "உனக்கு தெய்வ நம்பிக்கை இல்லை போலும். வா உன் வீட்டிற்குப் போகலாம்" எனக் கூறி அவனை அழைத்துப் போனர்.

அந்தக் குடிசைக்குள்ளே நுழைந்தார்.

மருதாயி சோம்பிய முகத்துடன் நாரும் தோலுமாகப் படுத்திருந் தாள், "மருதாயி ... யாரு வந்திருக்கிறது பாரு" என்ருன். முணகினுள் அவர் அவளருகே அமர்ந்து அவள் நாடியைப் பார்த்தார்.

மெல்ல புன்முறுவல் பூத்து, "கவலைப் படாதே தாயே! நீ சீக்கிரம் குணம் பெறுவாய்" எனக்கூறி அவள் நெற்றியிலே இறைவன் திருநாமம் சொல்லி நீறு பூசினுர். அதுமட்டுமல்ல; பக்கத்திலே இருந்த ஒரு இருப்பிடத் தைச் சொல்லி மருதாயியை அங்கே கொண்டு வரச் சொன்னுர்.

அந்த இடம்......

அழகிய மரங்களடர்ந்த குளிர்ந்த இடம். நல்ல இயற்கைக் காட்சி. சின்னஞ் சிறிய ஓலைக்கீற்றுக் குடிசைகள் பல. பக்கத்தில் இரண்டொரு குன்றும் ஒரு நீரோடையும்.

மருதாயி அமைதி நிரம்பிய அந்த இடத்தைப் பார்த்தாள். ஏதோ ஒரு புதிய சூழ்நிலை. அன்ருடம் காலையிலே பல் துலக்கி 'முருகா முருகா' வென உச்சரித்து நெற்றியிலே நீறு பூசிக்கொண்டு ஒரு துளி நீறை தண் ணீரில் கரைத்துக் குடித்து விட்டு அமர்வாள். அவளையுமறியாமல் பூஜை மணி ஓசை கேட்டு 'முருகா' வென்பாள்.

காலையிலே சூடான பசும்பால் வரும் குடிப்பாள். சிறிது நேரத்திற் கெல்லாம் பெரியவர் வருவார். ஏதோ சூரணம் தருவார். மலர்ந்த முகத் தோடு சாப்பிடுவாள்.

நாட்கள் ஓடின.........

அன்று......

மருதாயி பூரணகுணம் பெற்று பெரியவர் காலடியில் தன் கண வரோடு விழுந்து வணங்கினுள்.

அப்போது பெரியவர் சொன்னுர் —

"அம்மா! எழுந்திரு. என்னிடம் என்ன இருக்கிறது. ஏதோ நான் கற்ற பரம்பரை வழி பெரியோர் சித்த வைத்தியம் பயன்தந்தது. எல்லாம் அந்த பழனியாண்டவன் அருள். நம்மில் பலர் நம் சட்டைப் பைக்குள் என்ன இருக்கிறது என்பதை அறியாமல் பிறர் சட்டைப் பைக்குள் இருப் பதையே அறிய விரும்புகின்றனர். நம்முடைய பண்டைய பண்பாடு தெய்வ வழிபாட்டை மறந்து ஆங்கிலேயர்களால் அறிமுகம் செய்யப்பட்ட நவீன நாகரீக மருத்துவத்தில் மோகம் கொண்டு காசைக் கரியாக்குவ துடன் நோயாளி பிழைக்க வழியின்றி நவீன டாக்டரை நோக்கும்போது "என்ன செய்யலாம் எல்லாம் பார்த்தாகிவிட்டது இயேசு நாதரை தோத் திரம் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லும் மிலேச்ச வைத்தி

(அடுத்த பக்கம் கீழே பார்க்க)

# "ஜாதிகள் நான்கு உதித்த உண்மை வரலாறு"

(ஒரு அன்பர்.)

ஜாதிகள் நான்கு அதாவது பிராம்மணர், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றும் நான்கு ஜாதிப் பிரிவுகளை பிரம்மன் சிருஷ்டித்ததாக அல்லது உற்பத்தி செய்ததாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பிரம்மன் தலையிலிருந்து பிராமணன், மார்பிலிருந்து க்ஷத்திரியனும், கை கால்களிலிருந்து வைசியன், சூத்திரன் முறையே பிறந்தார்களென்று சொல்லுகின்றன.

இந்த ஜாதிப் பிரிவுகளை இந்து மதம் தவிர வேறு மதங்களிலும், வேறு நாடுகளிலும் காணவில்லை. உலக சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மன் இந்து மதத்தில் மாத்திரம் ஜாதிப் பிரிவுகளை தோற்றி இருக்க முடியாது.

மற்றபடி யார்? இந்த பாகு பாடுகளை தோற்றியிருக்க வேண்டும். இந்துமத கர்த்தாக்களாகிய மகா முனிவர்களும் மேதாவிகளும் தான் சிருஷ்டித்திருக்கவேண்டும். அவர்கள் செய்ததை பிரம்மன் தலையில் போட்டுவிட்டு தங்களை மறைத்துக் கொண்டார்கள். இப்படியேதான் வைத்தியம், வான சாஸ்திரம், சங்கீதம், சிற்பம் முதலிய அழியாசெல்வங்களையும் சிருஷ்டித்து அவைகளை ஈசன் முதலில் ஈஸ்வரிக்கும் அம்மை தெய்வங்களுக்கும் அவைகள் சித்தர்கள் கின்னரர்கள் முதலியவர்களுக்கும் வழிவழியாக சொன்னதாக எழுதிவைத்தார்கள். சிலை ரூபங்களாகவும் கோயில்களாகவும் வடித்தும் வைத்தார்கள். எழுதி வைத்தவைகள் அனேகமாக அழிந்தும், மறைந்தும் போயின. கோயில்களும் சிலைகளும் சிற்பங்களும் கேட்பாருக்கு ஒருவாறு சொல்லிக்கொண்டிருக்கின்றன.

---

யத்தை நம்பி உயிரை விடுகின்றனர். என்னே நமது நாட்டின் அறிவீனம்! சித்த வைத்தியம் பழங்கால வைத்தியமுறை தெய்வீக தன்மை பொருந்தியது, இயற்கை மூலிகைகளில் முருகனின் திருவருள் நிரம்பிக் கிடைக்கின்றது. அவனுடைய தூய அன்பு கொண்டு உண்மை உழைப்பால் நாம் எந்த நோயையும் விரட்டிவிடலாம். இதை உணர்வதில்லை பலர்" என்றூர்.

அவள் கண்களிலே நீர் வழிந்தது.

அவள் வாய் 'முருகா முருகா'வென உச்சரித்தது.

அவளை அழைத்துக்கொண்டு அவன் மெல்ல நடந்தான்.

(முற்றும்.)

இந்த நான்கு ஜாதிப் பிரிவுகளையும் இல்லறத்தான் ஒவ்வொருவனும் சிருஷ்டிக்கின்றான் என்றால் ஆச்சரியப்படுவீர்கள். ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளும், பெண்களும் ஒரே சூழ் நிலையில் வளர்ந்தாலும் குணத்தில் சேஷ்டையில் பிரிந்து காணப்படுகின்றன. ஒரு பிறப்பிலிருந்தே மகா சூஷ்ம புத்தியுடையவனாகவும் ஒருவன் மற்றவர்களை அதிகாரம் செய்து வாழ ஆசைப்படுபவனாகவும், ஒருவன் பேராசைக்காரன் சின்னபுத்தி உடையவனாகவும், இன்னொருவன் உடலுழைப்பில் ஆசைப்படுபவனாகவும் வளர்கின்றார்கள். இந்த குணப்பிரிவுக்கு காரணம் என்ன என்பதைத்தான் காணவேண்டும்.

ஜீவராசிகள் யாவும் மனிதன் உட்பட இன்பத்தையே அதாவது சந்தோஷத்தையே பெற ஆசைப்படுகின்றன. இன்பம் மனிதனுக்கு எப்போது உண்டாகின்றது என்றால் அவன் கோறிய எண்ணம் நிறைவேறும் போதுதான் உண்டாகின்றது. எண்ணம் நிறைவேறும்போது மனது (அதாவது எண்ணங்களின் உருவம்) சாந்தி அடைந்துதான் உதித்த இடத்திற்கு அதாவது சொரூபத்திற்கு திரும்புகின்றது. சொரூபத்தினிடத்துதான் இன்பம் உண்டாகும். அந்த இன்பம் சில சமயம் சிறிது நேரமும், சில சமயம் அதிக நேரமும் நிலைத்து நிற்கும்.

சிறிது நேரம் இருந்தால் சிற்றின்பம் என்றும் மற்றதற்கு பேரின்பம் என்றும் சொல்லுவார்கள். பேரின்பம் தபஸ்விகளுக்குத்தான் கிட்டும். சிற்றின்பம் மற்றவர்கள் யாவருக்கும் கிட்டும். அது பலவழிகளில் கிட்டும். இல்லறத்தானும் ஷை சிற்றின்பத்தைப் பெற ஆசைப்படுகின்றான். ஆண் பெண் சேர்க்கையால் பெறுகின்றான். அப்போது அவனை அறியாமலேயே சிருஷ்டி கர்த்தாவாகவும் ஆகிவிடுகிறான் சிருஷ்டிக்கு அதாவது குழந்தைகள் பேருக்கு முதல் காரணமான விந்து (இந்திரியம்) வெளிப்படும்போது அது மாத்திரம் வெளிப்படுவதில்லை. சரீரத்தில் உள்ள ஓஜஸ் (தெய்வீக சக்தி) சேர்ந்து வெளிப்படுகின்றது. அதற்கு ஓஜஸ் சரீரத்தில் அமுத நிலைகளில்தான் தங்கி இருக்கும். அமுத நிலைகளும் சரீரத்தில் இடம்விட்டு இடம் மாறி தங்குகிறது. அதன் பிரயாணமும் திதிகளின் மாறுதலுக்கு சம்பந்தப்பட்டு இருக்கிறது. சுமார் 15 இடங்களில் சரீரத்தில் கேந்திர ஸ்தானங்கள் அமுத நிலைக்கு உண்டு. பொதுவாக கொள்கைக்கு நான்கு நிலைகளாக அதாவது தலை, மார்பு, கைகள், கால்கள் என்று நிலைகளை பிரிக்கப்பட்டு இருக்கிறது எப்படி வைத்திய சாஸ்திரத்தில் நாடியை சுருக்கி வாதம், பித்தம், கபம் என்று மூன்றாக பிரித்திருப்பதைப்போல்,

சேர்க்கையின் போது விந்து வெளிப்படுவதற்கு முன்பு ஓஜஸ்தான் வரும். அப்போது அமுதநிலை எங்கே இருக்கின்றதோ அந்த இடத்திலிருந்து

வெளிப்பட்டு குய்யஸ்தானத்திலுள்ள இந்திரியப் பைக்கு (SEMINAL VESICLE வந்து சேரும். இரண்டும் சேர்ந்து தான் வெளிப்படும். அந்த ஓஜஸ் பிரயாணம் செய்யும் போது தான் மனிதன் சிற்றின்பத்தை நுகர்கின்ருன் அதன் பிராயாணம் தலையிலிருந்தா, மார்பிலிருந்தா கைகள், கால்களிலிருந்தா என்பதை ஒவ்வொரு சூக்ஷும இல்லறத்தானும் அப்போது உணரலாம்...!

ஓஜஸ் எங்கிருந்து கிளம்புகின்றதோ அந்த இடத்திலுள்ள அமுத நிலைகளின் அஸ்தஸ்ஸையும் தன்மையையும் பெற்றுப் போகின்றது அத் தன்மைக்கு ஏற்றதாக சூக்ஷும விருத்திகளை அப்போது இந்திரியப்பலத் தால் பிறக்கும் குழந்தைகள் பெறுகின்றன. அதனுல்தான் குழந்தைகள் ஒரே தாய் தகப்பன் இவர்களுக்கு பிறந்தும் பலதரப்பட்டு இருக்கின்றன.

நல்ல பிள்ளைகளைப் பெற திதிகளை (நிஷேக முகூர்த்தம்) ஆன்ருேர் கள் தேர்ந்தெடுத்ததின் காரணம் விளங்குகின்றது அல்லவா ?

ஓஜஸ் சிரசிலிருந்து வெளிப்படும்போது பிறக்கும் பிள்ளைகள் மேதாவிகளாகவும், மார்பிலிருந்து வெளிப்படும்போது க்ஷத்திரியன் போன்ற வீரப்பிள்ளைகளாகவும், கைகள் கால்களிலிருந்து வெளிப்படும் போது அதற்கு தகுந்த பிள்ளைகள் பிறக்கின்ருர்கள் இந்த உண்மைகளை உணர்ந்து வெளியிட்ட இந்துமதக் கர்த்தாக்களும் இந்து மதமும் தனிச் சிறப்புடையது அல்லவா ? வாழ்க நம் சித்தர்கள் அறநெறி உண்மைகள்.

(முற்றும்)

---

## ஈச்ச மரம் !

மரங்களில் எல்லா மரங்களும் காற்றடிக்கும் காலத்தில் இலையை உதிர்க்கும் மீண்டும் துளிர்க்கும். ஆனுல் இந்த ஈச்ச மரம் இருக்கிறதே இது இலை உதிர்ப்பதே இல்லை! ஒரு வேளை புயல்காற்று அடித்தால்கூட, வேரோடு மரம்தான் விழுமே ஒழிய இலை உதிராது.

இத்தன்மை போல் வாரும் நாட்டில் உண்டு, இவர்களுக் கெல்லாம் ஈச்சமரம் என்றுதான் பெயர். இவர்களிடம் கோடி கோடியாக பணம் குவிந்து இருந்தும் பிறர் நலத்திற்காகவோ, ஏழைகளுக்கு ஆகவோ இறங்கி ஒரு சல்லி கூட உதிர்க்க மாட்டார்கள் ! — திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

# நவக்கோள்களின் முன்னறிக்கை

சோதிட வித்வான், எம். எஸ். வைத்தியலிங்கம்.
விசுவாவசுஞூ கார்த்திகைமீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரையில்
(16—11—65) முதற்கொண்டு (15—12—65) வரையில்

மேஷம் : மாத ஆரம்பப் பகுதியில் எதிலும் தாமதம் அல்லது ஏமாற்றம் விதவிதமான செலவுகளால் பணமுடை சபலகுணம் தொழிலில் அதிருப்தி முக்கிய பந்துக்களுடன் வீண் விவாதம் கடிதப்போக்குவரத்தில் ஏமாற்றம் அகால உணவு மற்றும் இவைபோன்ற பிற்போக்கான நிகழ்ச்சிகளை சமாளிக்க வேண்டிவரும், சிலருக்கு வைத்தியரை சந்திக்கும் நிலைமை கூட ஏற்படலாம் ஆனுல் பிற்பகுதியில் நிலைமை சாதகமாகும்.

ரிஷபம் : 10-ல் ஆக்ஷி பெற்றமையால் பல அனுகூலங்கள் தருவர் இராசிநாதன் சுக்கிரனது போக்கு மாதம் பூராவும் சாதகமாக இல்லை. மற்றக் கிரகங்களது அனுகூல பிரதிகூல நிலைகளையும் கவனித்தால் ராசி நேயர்களுக்கு இம்மாதம் அலைச்சலும் வீண் சிலவும் தரும் காலம் எனலாம்.

மிதுனம் : வக்ரகதியில் உலவும் குரு தேவர் அவசியமற்ற செலவையும் வீண் அலைச்சலையும் தருவார். சுக்கிரனது போக்கால் மாத ஆரம்பத் பகுதியில் சில நன்மைகள் விளையும். எனினும் அவைகளை நம்பி ஏமாறக் கூடாது வர்த்தகம் செய்யும் நேயர்களுக்கு நிலைமை குழப்பமாகவும் நிச்சயமற்றதாகவும் தோற்றமளிக்கிறது.

கடகம் : அங்காரகன் மட்டும் இம்மாதம் பூராவும் நற்பலனை தரும். மனம் வேதனை கொள்ளும். பணமும், பலவழிகளில் சிதறும். எதிலும் அதிருப்தி கெட்டவர் உறவு பிறருக்கு உழைத்தும் கெட்ட பெயர் நியாயமற்ற சிலவு, சௌக்கியமற்ற வாழ்க்கை இவை குறிப்பிடத் தக்க அம்சங்களாகும். ஒரு சிலருக்கு மாத ஆரம்பப் பகுதியில் ஓரளவு நன்மை ஏற்படும் எனினும் பின் பகுதியில் அனுகூலம் சொல்வதர்கில்லை.

சிம்மம் : இந்த ராசி நேயருக்கு குரு தேவர் ஒருவர் மட்டும் மாதம் பூராவும் நற்பலன் தருவதில் முக்கியத்துவம் பெறுகின்ருன். ஆரம்பப் பகுதியில் எதிலும் ஏமாற்றம். எதிர்பாராத சிலவால் கடன் மனைவி மக்களைப்பற்றிய சிந்தனை சகாக்களால் தூஷணை வீண் விவாதத்தால் உறவினர்களிடம் பகை, வைத்தியரை சந்திக்கும் நிலை ஆனுல் குரு தேவர் ஏகா தசத்தில் நின்று பஞ்சமத்தை பார்ப்பதால் பானு கண்டப் பனிபோல் நீங்கும் எனலாம்.

கன்னி : சூரியன், சனி, கேது மட்டும் மாதம் பூராவும் நற்பலன் தருவதில் முனைகின்றனர். இந்நிலையில் கன்னியில் பிறந்த நேயர்களுக்கு இம்மாதம் இன்ப துன்பங்கள் கலந்துமிச்சிர பலனாக நடக்கும். இதில் மாத ஆரம்ப பகுதியில் நல்ல கடிதப்போக்கு வரத்தில் அனுகூலம் முடிவு. பிரயாணத்தால் நன்மை. பிற்பகுதியில் அனுகூலம் சொல்வதற்கில்லை. திடீரென பிரதிகூல காற்று வீசும். எதையும் சுலபமாக செய்யமுடியாது எதிர்பாராத அலுவல்களில் ஏமாற்றம் வரும்.

துலாம் : தராசில் பிறந்த நேயர்களுக்கு மாத ஆரம்ப வாரத்தில் சில வெற்றிகள் கிடைக்கும். எனினும் கடைசிவரை நிலைமை இப்படியே இருக்கும் என்று ஏமாரக்கூடாது. பொதுவில் ஏதோ ஒரு வழியில் கவலை கெட்டவர் நேசத்தால் அவமதிப்பு சபல குணம் பணமுடை நிஷ்டூர வார்த்தை கைக்கெட்டியது வாய்க் கெட்டாத நிலை. இவைபோன்ற பிற்போக்கான நிகழ்ச்சிகளை சமாளிக்கவேண்டிவரும். வர்த்தகம் செய்யும் நேயர்களுக்கு மாத பிற்பகுதியில் தொழில் பிரபலமாகும்.

விருச்சிகம் : நாலில் உலவும் சனி செளக்கியத்தைக் குறைப்பார். எதையும் சுலபமாக செய்ய முடியாது நிலைமை குழப்பமாகவும் பெரும் பாலான அலுவல்களில் ஏமாற்றமாகவும் இருக்கும் யோக தசை புத்திகள் நடப்பவர்களுக்கு புதுமுயற்சிகளில் அனு கூலமும் நல்லவர்கள் நேசம். சிறந்த உணவு பந்துக்களிடம் அதிகமதிப்பு கடிதப்போக்குவரத்திலும் கொடுக்கல் வாங்கல் செய்வதிலும் அனு கூலம் தரும் எனலாம் வர்த்தகம் செய்யும் நேயர்களுக்கு தொழில் பிரபலமாகவும் லாபகரமாகவும் இருக்கும்.

தனுர் : பெருபாலானக் கிரகங்கள் அனுகூல நிலையில் இருப்பதால் தனுர்-ராசிக்காரர்களுக்கு இம்மாதமும். நற்பலன் தரும் காலம் எனலாம் சிலசமயங்களில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை கண்டு கவலைபடத்தேவ யில்லை போதுவில் தன் விருப்பம் போல் முன்னுக்குவர சந்தர்ப்பம் கிடைக் கும் மேலும் பிரபலஸ்தர்களின் ஆதரவு சமயோசிதபுத்தி எதிர் பாராத நிகழ்ச்சிகளால் கவுரவம் வேண்டிய அளவிற்குப் பணவசதி கடிதப் போக் குவரத்தில் காரிய சித்தி ஸ்திர சொத்துகள் வாங்குவதில் கவனம் தரும்.

மகரம் : மாத ஆரம்பப்பகுதியில் ஏதோ ஒருவழியில் கவலை துஷ் டர்களின் நேசம். தொழிலில் வெறுப்பு குடும்பகவலை. கடிதப் போக்கு வரத்தில் ஏமாற்றம். நியாயமற்ற பேச்சால் பெரியஇடத்து பகை பிரயா ணங்களில் தடை ஆனுல் பின்பகுதியில். நிலமை சாதகமாக மாறும் நண்பர்களும் உறவினர்களும் அதிகம் உதவி செய்வார்கள்.

கும்பம் : மற்றக்கிரங்களது சாதக பாதக நிலைகளையும் கவனித்தால் குடும்பத்தில் பிறந்த நேயர்களுக்கு ஏமாற்றம் தரும். காலம் எனலாம். சில சமயங்களில் ஏற்படும். நற்பலன்களை கண்டு ஏமாறக்கூடாது. பொதுவில் திருப்தியற்ற உடல்நிலை மதிப்பற்றவர் நேசம் நியாயமற்ற சிலவு பயனற்ற பிரயாணம், ருசியற்ற உணவு, சாரமற்ற பேச்சு, லாபமற்ற

எண்ணங்கள், சுகமற்ற படுக்கை, எந்த விஷயத்திலும் சற்று முன் யோசனையுடன் நடப்பதால் சிறமங்களை தவிற்கலாம், சனிப்பிரீதி செய்வது நலம் தரும்.

மீனம் : பனிரெண்டில் உலவும் சனி பல வழிகளில் ஏமாற்றத்தை தருவார். தவிர்கமுடியாத சிலவால் பண நெருக்கடி ஏற்படும் பொதுவில். வெறுப்பு எதிலும் தாமதம். உறவினர்களால் தொல்லை அகால உணவு. மனைவி மக்களைபற்றியகவலை. கோபம் பிடிவாதம் இவை காரணமாக காரியம் கெடும். சமூகத்தில் அவமதிப்பு வீண் வழக்கு சரீர பீடை மற்றும் இவை போன்ற பிற்போக்கான நிகழ்ச்சிகளை சமாளிக்க வேண்டி வரும் வர்த்தகம் செய்யும் நேயர்களுக்கு மாத ஆரம்ப வாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். எனினும் கடைசிவரை நிலைமை இப்படியே இருக்கும் என்று ஏமாறக்கூடாது. சுபம்.


உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான்

## ஸ்ரீகுழந்தையானந்த சுவாமிகள் திவ்ய சரிதம்.

முன்னூற்றைம்பது ஆண்டுகள் உயிருடன் ஜீவித்து நான்கு முறை ஜீவ சமாதி எய்திய மகான். இவருடைய ஜீவ சரிதத்தை தினமணி உதவி ஆசிரியர்.

ஸ்ரீ K. S. V. ரமணி அவர்கள்

மிகவும் விரிவாக எழுதியுள்ளார். ஒவ்வொருவரும் தெரிந்துக் கொள்ள வேண்டிய அரிய புத்தகம்.

புத்தகம் விலை: ரூபாய் 2—00

கிடைக்குமிடம்: தபால் சிலவு தனி.

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்
357, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14.


மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் ஆ. இரா. கண்ணப்பர், 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ)